இனி தொடர்ந்து 'சூப்பர் ஹிட் நாவல்' திரில் திரிலான சம்பவங்களை படிக்க காத்திருங்கள்.

வழக்கம் போலவே இதழை படித்து முடித்ததும் உங்கள் எண்ணங்களை எழுத்தாக எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்.

உங்கள் சிறுகதைகள், ஜோக்ஸ், கவிதைகள் வழக்கம் போலவே வரவேற்கிறோம்.

நன்றியுடன்,
ஆசிரியர்,
ஆர்.முரளி.

**வாசகர்கள் கவனத்திற்கு...**
சிறுகதைகள், கவிதைகள், ஜோக்ஸ் அனுப்ப வேண்டிய முகவரி
**சூப்பர்ஹிட் நாவல்**
நெ.64/2, நாட்டு சுப்பராயன் தெரு,
மைலாப்பூர், சென்னை - 600 004.



Muthu lakshmi

# இங்கேதான் இறப்பார்கள்

## - ராஜேஷ்குமார்

## 1

"மேடம் சியாமளா கௌரி கேஸ் என்னாகும்னு நீங்க நினைக்கறீங்க விவேக்...?" யமஹா பைக்கை விரட்டிக் கொண்டிருந்த விவேக்கிடம் மெல்லிய குரலில் கேட்டார் கோகுல்நாத்.

"என்னாகும்? அந்தம்மா கிட்டே வேலைக்கு இருந்த செக்ரட்டரி குமார் குருரமான முறையில் முள் கரண்டியாலேயே, உடம்புல அறுபது இடத்துல குத்திகொன்னிருக்கான், அதுக்கு முன்னாடி மேடம் சியாமளாவோட வயசையும் பார்க்காமே கற்பழிச்சிருக்கான். சம்பவங்களை நேர்ல பார்த்ததுக்கான சாட்சியங்களும் இருக்கு. ஜட்ஜ் ரெண்டு கண்ணையும், காதையும் மூடிக்கிட்டு ஜட்ஜ்மெண்ட் தரலாம்... உயிர் போகும் வரை தூக்கில் தொங்க விடுமாறு..."

யமஹாவின் வேகம் குறைந்தது.

காரணம்.

கூவம் பாலத்தின் மேல் இரண்டு பக்க

மும் திமு திமு வென்ற கூட்டம். கீழே கறுப்பாய் ஓடிக்கொண்டிருந்த கூவத்தை எட்டி எட்டி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"என்ன கோகுல்நாத் இவ்வளவு கும்பல்?"

"கூவம் ஆத்துல எவனாவது நீச்சல் பழகறானா?"

"அமைச்சர் யாராவது... உல்லாசப் படகு விடற திட்டத்தை ஆரம்பச்சு வெக்கிறாரா...?" பைக்கின் வேகத்தை இன்னமும் குறைத்து... அதை மௌனமாக்கி ஓரமாய் ஸ்டாண்ட் இட்டான் விவேக் விவேக். ஹெல்மெட்டைக் கழற்றி கக்கத்தில் வைத்துக் கொண்டு மெல்ல நடந்து போய் கிராதிக் கம்பியைப் பற்றியபடி கீழே எட்டிப் பார்த்தான்.

மூக்கை அடைக்கும் கந்தக நெடியோடு - கறுப்பாய் ஓடிக்கொண்டிருந்த கூவம் ஆற்றின் ஓரத்தில்...

அந்த நிர்வாண உடம்பு குப்புறக் கிடந்தது.

அதன் தலை திரும்பியிருந்தது.

'ஆணா... பெண்ணா?' உன்னிப்பாய் பார்க்க முயன்றான் விவேக்.

○ ○ ○



## 2

பாண்டியன் காட்போர்ட்ஸ் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் வாசுதேவனும் அவருடைய முப்பது வயது மகன் முகேஷும் - எதிரெதிர் சோபாக்களில் சாய்ந்திருந்தார்கள். இரண்டு பேரின் முகங்களிலும் சந்தோஷம் தடவியிருந்தது.

"முகேஷ்.."

அலைஅலையாய் சுருண்ட கிராப்பும், சிவந்த உடம்புமாய் - கனமான ஸ்பெக்ஸ் கண்ணாடியோடும் தெரிந்த முகேஷ் நிமிர்ந்தான்.

"என்னப்பா...?"

சினிமா நடிகர் செந்தாமரையை ஞாபகத்துக்குக் கொண்டு வந்த வாசுதேவன் - கையிலிருந்த சிகரெட்டின் சாம்பலை ஆஷ்ட்ரேயில் உதிர்த்துக் கொண்டே கேட்டார்.

"அந்த பாம்பே பார்ட்டியைப் பத்தி நல்லா விசாரிச்சிக் கிட்டாயா...?"

"விசாரிச்சுட்டேன்பா..."

"யார்கிட்டே விசாரிச்சே...?"

"நம்ப காந்திலால் சந்த்கிட்டே?"

"என்ன சொன்னார்?"

"அருமையான பார்ட்டி ஃபிராபிட் பர்சன்டேஜ் கொஞ்சம் குறைச்சலா இருந்தா

லும் பிசினஸ் டீல் பண்ணச் சொன்னார்.''

''லால்சந்த் சொன்னா சரியா இருக்கும்...'' வாசுதேவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே டீபாயின் மேலிருந்த டெலிபோன் கதறியது.

முகேஷ் ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ!''

''ஸார், நான்தான் பர்சேஸிங் ராமநாதன் பேசறேன்.''

''சொல்லுங்க.''

''ஸார், பார்ட்டி ஆபீஸுக்கு வந்திருக்கார் நீங்க உடனே புறப்பட்டு வந்தா பிசினஸ் பேசிடலாம்.''

''கூட யாராவது இருக்காங்களா?''

''இல்லை ஸார். அவர் மட்டும்தான் இருக்கார்.''

''சரி, நானும் அப்பாவும் இப்ப வந்துடறோம். பார்ட்டியை அப்பாவோட பிரைவஸி ரூம்ல உட்கார வையுங்க.''

''எஸ் ஸார்.''

முகேஷ் ரிஸீவரை வைத்துவிட்டுத் தன் அப்பாவை ஏறிட்டுப் பார்க்க அவர் கார் சாவியோடு நின்றிருந்தார்.

''போலாமாப்பா...?''

''ம்...''

போர்டிகோவில் - செர்ரி பழ நிறத்தில்



பளபளத்த கண்டசா காரில் ஏறினார்கள். முகேஷ் ஸ்டீரியங்கைப் பிடித்தான்.

கார் காம்பௌண்ட் கேட்டைத் தாண்டியதும் வாசுதேவன் புதிதாய் டன்ஹில் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டார். சீட்டின் ஓரமாய் இருந்த ஆஷ்ட்ரேயை இழுத்து விட்டுக் கொண்டார். மெலிதான காரத்தோடு கூடிய புகையை தொண்டைக்குள் இறக்கிக் கொண்டபடி கேட்டார்.

''முகேஷ்... நம்ம குடோன்ல இப்போ எவ்வளவு ஸ்டாக் இருக்கும்?''

''நூத்தி இருபது டன்''

''பிளாக்ல எவ்வளவு இருக்கும்...?''

''எழுபது டன் இருக்கும்...''

''பாம்பேயிலிருந்து வந்திருக்கிற இந்த பார்ட்டி ஜோத்ராம் எப்படி பர்சேஸ் பண்ணுவான்? பிளாக்கா? ஒயிட்டா...?''

''தெரியலை... எப்படிக் கேட்டாலும் குடுத்துடலாம்... ஆனா பார்ட்டி கேஷ் பார்ட்டி. நாம சொல்ற விலைக்கு இறங்கி வரமாட்டான்...''

''நான் அவனைப் பார்த்துக்கிறேன். நானும் அவனும் பிசினஸ் பேசிட்டிருக்கும் போது நீ குறுக்கால பேசாதே...''

''சரி...''

கார் மௌண்ட் ரோடில் வேகம் பிடித்து

சிக்னல்களில் தயங்கி தி.நகரின் உள்ளே இருந்த போது பிராடக்ட்ஸ் கம்பெனியைத் தொட்ட போது காலை பதினோரு மணி.

பர்சேஸிங் மானேஜர் ராமநாதன் போர்டிகோவிலேயே காத்திருந்தார். குட்மார்னிங் சொல்லி இருவரையும் நெருங்கினார்.

"என்ன ராமநாதன்... பார்ட்டி என்னோட பிரைவஸி ரூம்லதானே இருக்கு?"

"ஆமா... ஸார்..."

வராந்தாவில் வேகவேகமாய் நடந்து கோடியிலிருந்த ஏர்கண்டிஷனர் உறுமும் பிரைவஸி அறைக்கள் நுழைந்தார்கள்.

வெள்ளைநிற ஷெர்வாணியில் குஷன் நாற்காலியில் புதைத்து ஹிண்டு பேப்பர் பார்த்துக் கொண்டிருந்த அந்த இளைஞன் திரும்பினான்.

"குட்மார்னிங்... மிஸ்டர் வாசுதேவன் அண்ட் மிஸ்டர் முகேஷ்..."

"குட் மார்னிங் ஜோத்ராம். ஸாரி ஃபார் த டிலே உங்களை காத்க வெச்சுட்டோம்...?"

"நோ... நோ... நான் அங்கே வந்து பத்து நிமிஷம் கூட ஆகலை..."

ஜோத்ராம் தன் ஆரோக்கியமான பற்களைக் காட்டிச் சிரித்தான்.

வாசுதேவனும் முகேஷும் எதிரேயிருந்த குஷன் நாற்காலிகளில் சாய்ந்தார்கள்.



"என்ன சாப்பிடறீங்க? ஹாட் ஆர் கோல்ட்?"

"நாட் நெச்சரி"

"ப்ளீஸ் ஹேவ் எய்தர் திஸ் ஆர் தட்?"

"ஹாட்."

"காப்பி?"

"எஸ்."

வாசுதேவன் முகேஷைப் பார்க்க முகேஷ் இண்டர்காம் ரிசிவரை எடுத்து - காப்பிக்கு சொல்லிவிட்டு ரிஸீவரை வைப்பதற்குள் வாசுதேவனும் ஜோத்ராமும் பிசினஸ் பேச ஆரம்பித்திருந்தார்கள்.

"டீலர்ஷிப் யாருக்கும் தர்ற மாதிரி இல்லை. இந்தியாவில் இருக்கிற ஒவ்வொரு ஸ்டேட்டுக்கும் நாங்களே டீலராயிருக்கோம்."

"சிரமமாய் இருக்குமே?"

"எங்களுக்கு அப்படித் தெரியவில்லை."

"சரி, எனக்கு மாதா மாதம் எவ்வளவு பேப்பர் எவ்வளவு காட் போர்ட்ஸ் சப்ளை பண்ணுவீர்கள்?"

"இருவது டன்."

வாசுதேவன் சொல்ல -

ஜோத்ராம் சிரித்தான்.

"அந்த இருபது டன் எங்களுக்குக் காணாது."

"உங்களோட தேவை எவ்வளவு?"

"மாதா மாதம் நூறு டன்."

"கேஷ்? ஆர் தி கிரடிட்."

"ஹாட் கேஷ். சரக்கு லாரியில் லோட் ஆனவுடன் உங்க கையில் டிராப்ட் குடுத்துடுவேன்."

"ஸாரி. மாதா மாதம் நூறு டன்னை சப்ளை பண்ண முயாது. அதுல கொஞ்சம் ப்ராப்ளம் இருக்கு."

"என்ன பிராப்ளம்?"

"பாதி சப்ளையை பிளாக்லதான் தர முடியும்."

"யூ மீன்?"

"ப்ராப்பர் இன்வாய்ஸ் பில் இல்லாம."

ஜோத்ராம் புன்னகைத்தான்.

"இது எல்லா பிசினசிலும் இருக்கிறது தானே? உங்களாலே மேக்ஸிமம் எவ்வளவு சரக்கை பிளாக்ல தர முடியும்?"

"அம்பது டன்."

"இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்த முடியாதா?"

"ஸாரி. மத்த பார்ட்டிகளுக்கும் அதே



முறையில் தான் சரக்கை சப்ளை பண்ணிட்டிருக்கோம். உங்களுக்கு அதிகப்படியா கொடுத்தா மற்ற பார்ட்டிகளுக்கெல்லாம் பாதிக்கும்."

"வேற எந்த பார்ட்டிகளுக்கெல்லாம் சப்ளை பண்றீங்க?"

"டில்லி சலில் சௌத்ரி, கல்கத்தா சித்திர மோகன்பானர்ஜி, பாம்பே காந்திலால்லால் சந்த், நாக்பூர் ஹர்கோவிந்தாஸ், கோலப்பூர் சங்கர் பாப்பா டாக்கரே, ஹைதராபாத் யாத கிரி பேப்பர் போர்ட்ஸ்."

"தாங்யு ஃபார் யுவர் இன்பர்மேஷன் மிஸ்டர் வாசுதேவன்."

ஜோத்ராம் சொல்லிக் கொண்டே தன் கோட் பாக்கெட்டில் இருந்த அந்த தீப் பெட்டி சைஸ் மினி டேப்ரிக்கார்டரை மேசையின் மேல் எடுத்து வைத்தான்.

சொன்னான்.

"இப்போ நாம் பேசின... எல்லாமே இந்த டேப்ரிக்கார்டர்ல அட்சர சுத்தமா பதிவாயிருக்கு வாசுதேவன்."

"நீ... நீ... நீங்க...?"

"நான் ஜோத்ராம் இல்லை. டெல்லி சி.பி.ஐ. ஆபீசர். தமிழ் தெரிந்த பரத் மெஹ்ரா."

சொல்லிக் கொண்டே கோட்டின் மேல்

பாக்கெட்டில் இருந்த தன் உத்யோக அட்டையை எடுத்து வாசுதேவனின் முகத்திற்கு முன்னால் காட்டினான்.

வாசுதேவனும் முகேஷும் ரத்தம் காணாமல் போன முகங்களோடு ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

○ ○ ○

## 3

ஒரு நீளமான மூங்கில் குச்சியால் கூவம் ஓரமாய் கிடந்த அந்த நிர்வாண உடலை கான்ஸ்டபிள் புரட்டிப்போட பிணத்தின் முகத்தைப் பார்த்த விவேக் திடுக்கிட்டுப் போனான்.

முகத்தில் எந்த உறுப்புமே இல்லை.

சொத சொதவென்று ஊறிப்போன சதை மட்டும் பூசிவிட்ட மாதிரி தெரிந்தது. கண்கள் இருக்க வேண்டிய இடத்தில் கறுப்பாய் இரண்டு குழிகள். மூக்கு இருக்க வேண்டிய இடத்தில் முக்கோணமாய் ஒரு பள்ளம். உதடுகள் தெரியாத ஒரு நீளமான பள்ளத்துள் துருத்தின மாதிரி பல் வரிசை.

இடுப்புக்கும் மார்புக்கும் பார்வையைக் கொண்டு போனார் விவேக். ஆண் பிணம் என்று ஊர்ஜிதமாய் தெரிந்தது.

கோகுல்நாத் விவேக்கைப் பார்த்தார்.



"என்ன விவேக்... கேஸை இந்த பீட் இன்ஸ்பெக்டர் கிட்டே ஹேண்ட் ஓவர் பண்ணிட்டு கிளம்பிட்டே இருக்கலாமா?"

"ஏன்...?"

"இது ஏதாவது தற்கொலை கேஸா இருக்கலாம்..."

"ஒரு நிமிஷம் நில்லுங்க கோகுல்நாத்... இது தற்கொலை கேஸ் மாதிரி எனக்குத் தெரியலை."

"பின்னே..."

"மர்டர் கேஸ்... யாரோ கொலைபண்ணி இங்கே கொண்டு வந்து போட்டிருக்காங்க... கொலை நடந்து குறைந்த பட்சம் நாலு நாளாவது ஆயிருக்கும்."

கோகுல்நாத் திகைப்பாய் பார்க்க - கர்ச்சீப்பால் தன் மூக்கை இறுக்கமாய் பொத்திக் கொண்ட விவேக் பிணத்தின் அருகே மண்டியிட்டு உட்கார்ந்தான்.

○ ○ ○

## 4

ரிக்கார்டிங் தியேட்டரை விட்டு வெளியே வந்தான் அமிர்தம். வெளியே கார் அருகே காத்திருந்த படத் தயாரிப்பாளர் அவனை அப்படியே இறுகக் கட்டிக் கொண்டார்.

"அமிர்தம் அந்தப் பாட்டு உனக்கு அகில இந்திய அளவிலே பெரிய பரிசை வாங்கிக் கொடுக்கப் போகுது"

"தாங்க்யூ ஸார்... எல்லாமே நீங்க தர்ற ஆதரவுதான்... நீங்க மட்டும் துணிஞ்சு என்மேலே நம்பிகைகை வெச்சு சான்ஸ் தந் திருக்காட்டி நான் ஒரு ப்ளே பேக் சிங்கரா வந்திருக்கவே முடியாது. இன்னும் ரோட்ல உட்கார்ந்துகிட்டு ஆர்மோனியப் பெட் டியை வாசிச்சுகிட்டு பழைய டி.எம்.எஸ். பாட்டுக்களை பாடிட்டிருக்க வேண்டியது தான்..."

தயாரிப்பாளர் எதிர்த்தார்.

"யாரோட திறமையையும், யாரும் கட் டுப்படுத்த முடியாது. ஆமா, உனக்கு பம் பாய் ஃப்ளைட் எத்தனை மணிக்கு...?"

"சாயந்தரம் ஏழு மணிக்கு..."

வாட்சை, உயர்த்திப் பார்த்தார். தயாரிப் பாளர்.

"இன்னம் மூணு மணி நேரமிருக்கு..."

"நான் வீட்டுக்குப் போய் பாக்கேஜ் ரெடி பண்ணி ஒரு டாக்சியைப் பிடிச்சு ஏர்போர்ட் போறதுக்குச் சரியா இருக்கும்."

"துபாய்ல எத்தனை நாள் ப்ரோக் ராம்..."

"நாலுநாள்..."



"அப்போ அடுத்த வாரந்தான் திரும்ப வருவே...?"

"ஆமா...ஸார்...."

"சரி... கிளம்பு... நீ துபாய் போய்ட்டு வர் றதுக்குள்ளே சாங் சிச்சுவேஷன் ஷூட் பண் ணிடுவேன்..."

"வர்றேன் சார்..."

தன்னுடைய ஸ்கூட்டரை நோக்கி நடந் தான் அமிர்தம். தயாரிப்பாளர் பின்பக்கமி ருந்து குரல் கொடுத்தார்.

"இன்னுமா ஸ்கூட்டர்...? கார் எப்ப வாங்கப் போறே...?"

திரும்பி நின்று சிரித்தான் அமிர்தம்.

"இன்னும் முழுசா ஒரு பத்து பாட்டு கூட பாடலை... அதுக்குள்ள எப்படி சார் கார் வாங்க முடியும்...?"

"சீக்கிரமா வாங்கிடலாம்... இந்தப் படம் ஜூப்ளிபோகட்டும்... நானே உனக்கொரு கார் வாங்கித் தர்றேன்..."

"அப்ப... கண்டிப்பா படம் ஜூப்ளி ஓடும் சார்..."

சொல்லிக் கொண்டே ஸ்கூட்டரை உதைத்தான் அமிர்தம். அது உயிர் பிடித்துக் கொண்டதும் சீட்டில் பரவி ஆக்ஸிலேட்டரை முறுக்கி ஸ்டூடியோ ப்ளோர்களின் வாசலில் நின்றிருந்தவர்களைப் பார்த்துக் கொண்டே

வெளியே வந்து ரோட்டின் போக்குவரத்தில் கலந்தான்.

பதினைந்தாவது நிமிஷம் வீட்டில் இருந்தான்.

குளித்தான்.

ஒரு பெரிய ரோலர் சூட்கேஸில் ஒரு வார காலத்துக்கு வேண்டிய துணிகளை அடைத்துக் கொண்டான். வாசலில் காத்திருந்த வேலையாளைக் கூப்பிட்டு டாக்ஸி கொண்டு வர, செய்து வீட்டைப் பூட்டிக் கொண்டு டாக்ஸியில் ஏறினான்.

வேலையாளின் கையில் பத்து ரூபாய் நோட் ஒன்றைக் கொடுத்து, "மணி நான் வர்ற வரைக்கும் வீட்டைப்பார்த்துக்கோ... அடுத்த வாரமெல்லாம் வந்துடுவேன்.." என்றான்.

அவன் தலையாட்டிக் கொண்டிருக்கும் போதே டாக்ஸி கிளம்பியது. டாக்ஸி டிரைவர் கேட்டார்.

"ஏர்போர்ட் தானே ஸார்?"

"ஏர்போர்ட் தான்...! ஆனா அதுக்கு முன்னாடி மைலாப்பூர்ல நான் சொல்ற அட்ரசுக்கு போகணும்..."

"அட்ரசை சொல்லுங்க சார்..."

"ஆலிவர் வீதி..."

டாக்ஸி டயர்களைத் தேய்த்தது. ட்ராபிக்



நெரிசலில் அறுபது நிமிட நேரம் நீந்தி விட்டு மைலாப்பூர் ஆலிவர் வீதிக்குள் நுழைந்து அமிர்தம் சுட்டிக் காட்டிய பங்களாவுக்குள் நுழைந்தது.

போர்டிகோவில் நின்றது.

அமிர்தம் கீழே இறங்கினான்.

"டிரைவர் ஒரு அரை மணி நேரம் வெயிட்டிங்ல இருக்க முடியுமா...?"

"இருக்கேன் சார்... நீங்க மட்டும் என்னை நல்லா கவனிச்சுட்டா போதும்."

அமிர்தம் சிரித்துக் கொண்டே உள்ளே போக எதிர்ப்பட்டார் டாக்டர் ரகுபதி.

ஐம்பது வயது உடம்பு. பளீரென்று முன் மண்டை வழுக்கை. மலேசியன் லுங்கி. வெள்ளை வெளேரென்ற பனியன். ரிஸ்ட்டில் மின்னும் கறுப்பு டயல் வாட்ச்.

"வா... அமிர்தம்... வா.."

அமிர்தம் அவர் காலில் விழ முயன்றான்.

"ஏய்... என்ன இது? எந்திரி..."

"ஸார்... என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க சார்... முதல் தடவையா ஃப்ளைட் ஏறி, கடல் தாண்டி பாடல் போறேன்."

"அமர்க்களமா போயிட்டு வா..."

"இந்த வாழ்க்கை நீங்க எனக்கு போட்ட பிச்சை சார். மவுண்ட் ரோடு போஸ்ட் ஆபீஸ் வாசல்ல - ஆர்மோனியப் பெட்டியை வெச்

சுக்கிட்டு பாடிட்டிருந்த என்னை கவுரவம் பார்க்காமே உங்க கார்ல ஏத்திக்கிட்டு போய் உங்களுக்குத் தெரிந்த மியூசிக் டைரக்டர் கிட்டே அறிமுகம் பண்ணி வெச்சு... பாட வாய்ப்பு வாங்கிக் கொடுத்து...''

''போதும், போதும்... இதே வாக்கியத்தை ஆயிரம் தடவை சொல்லியிருப்பே... உன்னோட குரல் இனிமை என் மனசுக்கு இதமாயிருந்தது. என்னோட நெருங்கின சிநேகிதன் ஒருத்தன் சினிமாவிலே மியூசிக் டைரக்டரா இருந்தான். ரெண்டுக்கும் முடிச்சுப் போட்டு விட்டேன். அவ்வளவுதான்.''

ரகுபதி அவனுடைய தோளைத் தட்டினார்.

''அம்மா இருக்காங்களா சார்?''

''அவ இப்பதான் ரிசப்ஷன் பார்ட்டி ஒண்ணுக்கு கிளம்பிப் போனா... ஆமா ஏர் போர்ட்டுக்கு உன் கூட யாராவது வர்றாங்களா?''

''யாரும் வரலை சார்.. வர்ற அளவுக்கு நான் இன்னும் பிரபலமாகலை.''

''நான் வந்து உன்னை வழியனுப்பறேன் டாக்ஸியை வெயிட்டிங்ல போட்டிருக்கியா...?''

''ஆமா... சார்...''



''அதை அனுப்பிச்சுடு. நம்ம கார்லேயே பேயிடலாம்.''

''எதுக்கு சார் உங்களுக்கு சிரமம்?''

''சிரமமா...? இட் ஈஸ் எ ப்ளஷர், உன்னைப் பத்தி இப்ப யாருக்கும் தெரியாம இருக்கலாம். அடுத்த வருடம் பாரு...''

''எல்லாமே உங்க ஆசிர்வாதம் தான் சார்.''

''சரி, ஃப்ளைட் எத்தனை மணிக்கு?''

''ஏழு மணிக்கு.''

''இன்னும் நேரம் இருக்கு.''

''பம்பாயிலிருந்து துபாய்க்கு எத்தனை மணிக்கு ஃப்ளைட்.''

''விடிகாலை அஞ்சு மணிக்கு.''

''கலை நிகழ்ச்சி க்ரூப்ல மொத்தம் எத்தனை பேர்...?''

''இருபது பேர்...''

''எல்லாரும் போயிட்டாங்களா?''

''போயிட்டாங்க சார். நான் மட்டும் தான் கடைசி. நான் அந்த க்ரூப்ல இடம் பெறக் கூடாதுன்னு சீனியர் ஆர்ட்டிஸ்ட் ரெண்டு பேர் முட்டுக்கட்டை போட்டாங்க சார்.''

''அதுதான் சினிமா உலகம். சரி, நீ போய் டாக்ஸியை அனுப்பிச்சுட்டு வா.''

டாக்டர் சொல்ல அமிர்தம் போர்ட்டிகோ

வில் நின்றிருந்த டாக்ஸியை நோக்கிப்போ
னான்.

○ ○ ○

## 5

**போ**லீசார் கும்பலை விரட்டிக் கொண்டிருக்க பிணத்தின் அருகே மண்டியிட்டு உட்கார்ந்திருந்த விவேக்,

''கோகுல்நாத், பாடியை நல்லா பாருங்க...'' என்றார்.

கோகுல்நாத் பார்த்தார்.

''பாடி பூராவும் கருகின மாதிரி தெரியுது.''

''அப்புறம்.''

''உடம்பு தண்ணியில் ஊறியிருக்கிறதுனால ஒண்ணுமே தெரியலை விவேக்.''

''பாடியோட மார்பைப் பாருங்க.''

பார்த்தார்.

ஆழமான ரத்த காயம் குழி பறித்த சைஸில் தெரிந்தது. அந்த சதைக் குழிக்குள் உறைந்து போன ரத்தம் திப்பி திப்பியாய் தெரிந்தது.

''ஏதோ ஒரு ஆயுதத்தால் குத்தியிருக்காங்க.''

''நோ, கோகுல்நாத்... இந்த காயம் எந்த



ஒரு ஆயுதத்தாலும் குத்தின காயில்லை.''

''பின்னே...?''

''துப்பாக்கி தோட்டா துளைச்ச காயம். இட் மே... பி... ஸ்பைரல் புல்லட்... பாடியை போஸ்ட் மார்ட்டத்துக்கு அனுப்பினா... இன்னும் விவரம் கிடைக்கும்.''

கோகுல்நாத் அருகே நின்றிருந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவரைக் கூப்பிட்டார்.

''பாடியை பி.எம். அனுப்ப ஏற்பாடு பண்ணிட்டீங்களா?''

''ஸ்பாட் போஸ்ட் மார்ட்டத்துக்கு சொல்லியிருக்கு சார். டாக்டர் இப்போ வந்துடுவாங்க.''

விவேக் அந்த பிணத்தையே பார்த்தான்.

பார்வை உருகுலைந்துபோன முகத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் கீழே தாழ்ந்து இடுப்புக்கு வந்து நின்றது.

நீரில்ஊறிய அரை நாண் கயிறு இறுக்கமாய் தெரிய அதைப் பற்றி மெல்ல இழுத்தான். அதன் மறுமுனையில் கட்டயிருந்த வெள்ளியால் ஆன தாயத்தும் கூடவே வந்தது.

○ ○ ○

## 6

சி.பி.ஐ ஆபீசர் பரத் மெஹ்ரா நாற்காலிக்கு நன்றாய் சாய்ந்து கொண்டார். மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார்.

"உங்க பாண்டியன் பேப்பர் பிராடக்ட்ஸ் கம்பெனி மேல எங்க டிபார்ட்மெண்டுக்கு நாலைஞ்சு மாசமாவே ஒருகண். தமிழ் தெரிந்த என்னை இங்கே அனுப்பி உங்க கேசை டீல் பண்ணச் சொன்னாங்க. பம்பாயில் இருக்கிற ஜோத்ராம் பேப்பர் ப்ராடக்ட் டீலர் பேரை உபயோகப்படுத்தி இந்த நிமிஷம் உங்களை மடக்கிட்டேன்."

வாசுதேவனும், 'முகேஷ்'"ம் அந்த ஏ.சி.அறையிலும் வியர்த்துப் போயிருக்க பரத் மெஹ்ரா தொடர்ந்தார்.

"உங்க மூணு வருஷ அக்கௌண்ட்ஸ், அது சம்மந்தப்பட்ட புக்ஸ், வவுச்சர்ஸ் எல்லாமே எங்க டிபார்ட்மெண்டுக்கு வேணும். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நீங்க சொன்ன ஓரல் ஸ்டேட்மெண்ட் படி பிளாக்ல பில் இல்லாமே நிறைய ஸேல் பண்ணியிருக்கீங்க. அந்த டீடெய்ல்ஸ்"ம் எங்களுக்கு வேணும். வித் யுவர்பர்மிஷன் நான் இங்கிருந்து ஒரு எஸ்.டி.டி. பேசிக்கலமா?"

வாசுதேவன், சுதாரித்துக் கொண்டு கையமர்த்தினார்.



Muthu

"ஒரு நிமிஷம் மிஸ்டர் பரத் மெஹ்ரா..."

"எஸ்"

"உங்க டிபார்ட்மண்டிலிருந்து நீங்க மட்டும்தானே வந்திருக்கீங்க...?"

"ஆமா..."

"நான் ஒண்ணு சொன்னா நீங்க தப்பா நினைக்கக் கூடாது."

"சொல்லுங்க..."

"நீங்க இந்த விஷயத்தை மேற்கொண்டு கிளறாமே இருக்க... ஹாட் கேஷா ஒரு லட்சம் ரூபா தர்றோம்..."

பரத் மெஹரா புன்னகைத்தார்.

"எவ்வளவு சொன்னீங்க...?"

"ஒரு லட்சம்."

"உங்க கம்பெனியின் மன்த்லி டர்ன் ஓவர் என்னன்னு சொல்ல முடியுமா மிஸ்டர் வாசுதேவன்?"

"அம்பது லட்சம்."

"பச்சை பொய்... என்னோட கணக்குப் படி ஒரு கோடி ரூபாய். பிளாக் சேலையும் சேர்த்தால்..."

"சரி, நீங்க எவ்வளவு எதிர் பார்க்கறீங்க?"

"மாச டர்ன் ஓவர்ல பத்து பர்சண்ட்..."

"யூ... மீன் பத்து லட்சம்."

"எஸ்..."

"இது ரொம்ப ரொம்ப அதிகம்..."

பரத் மெஹ்ரா சிரித்தார்.

"கடந்த ஆறு மாச காலத்துல எனக்கு கிடைச்ச வேட்டையில் இந்த வேட்டை ரொம்ப ரொம்ப பெரிய வேட்டை. கேஸ் கோர்ட்டுக்குப் போனா நீங்க கட்ட வேண்டிய பைன் எவ்வளவு தெரியுமா? அம்பது லட்சம்... இது தவிர பொய்யான கணக்கினை கொடுத்ததற்காக அப்பாவுக்கும், மகனுக்கும் இம்பிரிசின்மெண்ட்டும் உண்டு. குறைந்த பட்சம் ரெண்டு வருஷம்..."

"மிஸ்டர் பரத்மெஹ்ரா... எங்க நிலைமையைப் பத்தி எங்களுக்கே தெரியும். ஆனா நீங்க கேக்கிற அமௌண்ட் ரொம்ப் அதிகம்..."

"நீங்க சொன்ன ஒரு லட்சம் ரொம்ப கம்மி..."

"சரி, ரெண்டு லட்சமா வாங்கிக்கங்க..."

"இன்னும் கொஞ்சம் மேலே வாங்க..."

"சாரி, அவ்வளவுதான் எங்களாலே முடியும்..."

"மிஸ்டர் வாசுதேவன் அவசரப்பட்டு எதையும் சொல்லிடாதீங்க... நான் இந்த



மெட்ராஸ்ல இன்னும் ரெண்டு நாள் தங்குவேன். உங்க கம்பெனி மாதிரியே இன்னும் நாலைஞ்சு கம்பெனி என்னோட கைவசம் இருக்கு. இதை பார்த்து முடிக்கிறதுக்குள்ளே உங்க முடிவை நீங்க சொல்லலாம்... என்னோட குறைந்த பட்ச ரேட் ஏழு லட்சம்."

சொல்லிக் கொண்டே பரத் மெஹ்ரா எழுந்தார்.

"அமௌண்ட் விஷயத்துல கொஞ்சம் ரீகன்சிடர் பண்ணக் கூடாதா மிஸ்டர் பரத் மெஹ்ரா?"

"சாரி... இந்த ஏழு லட்சம் எனக்கு மட்டுமில்லை. என்னோட ஸ்க்வாட்ல இருக்கிற மத்த ஸ்டாஃப்ஸுக்கும் என்னோட ஆபிசர்ஸுக்கும் இதுல பங்கு தரணும். உங்க கம்பெனியோட கறுப்பு சம்பந்தப்பட்ட விவகாரங்கள் எல்லாம் வெளிலே வராம இருக்கணும்னா நீங்க இந்த ஏழு லட்சத்தைக் கொடுத்துதான் ஆகணும். ஒண்ணும் அவசரமில்லை. நிதானமா யோசியுங்க... ஹோட்டல் கோரமண்டல் நானூத்திப் பத்தாம் நெம்பர் ரூம்ல தங்கியிருக்கேன். நீங்க யோசனை பண்ணி உங்க முடிவைச் சொல்லுங்க. நான் வர்றேன்."

பரத்மெஹ்ரா நாற்காலியைத் தள்ளிக் கொண்டு ஒரு புன்னகையோடு நகர்ந்தார்.

கதவைத்திறந்து கொண்டு வெளியே

போனதும் வாசுதேவனும் முகேஷும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

"ரொம்ப ஈஸியா இவன்கிட்டே ஏமாந்துட்டோம்... முகேஷ்..."

"இப்போ... என்னப்பா பண்ணலாம்?"

"எம்மனசுலே இப்போ ரெண்டு முடிவு இருக்கு..."

சொன்ன வாசுதேவன் புகைத்துக் கொண்டிருந்த முழு சிகரெட்டை ஆஷ்ட்ரேயின் உள்ளே இட்டு நசுக்கினார்.

"ஒருயோசனை அவன் கேட்டபடி ஏழு லட்சம் ரூபாயைக் கொடுத்துட்டு சமரசமா போயிட வேண்டியது..."

"இன்னொரு யோசனை...?"

"அவனுக்கு சமாதி கட்டறது..."

○ ○ ○

## 7

ஸ்பாட் போஸ்ட் மார்ட்டம் செய்த டாக்டர் விவேக்கிடம் திரும்பிச் சொன்னார்.

"உடம்பு இருக்கிற டிகம்போசிங் ஸ்டேஜைப் பார்த்தா... சம்பவம், நாலு நாளைக்கு முன்னாடி நடந்திருக்கணும்... மார்புல தோட்டா பாய்ஞ்ச மார்க் இருக்கு... ஆனா தோட்டாவை எடுத்துட்டு பாடியை இங்கே



கொண்டு வந்து வீசிட்டுப் போயிருக்காங்க... முகம் அடையாளம் தெரியாதபடிக்கு ஆசிட்டைக் கொட்டி மொழுகியிருக்காங்க."

விவேக் குறுக்கிட்டான்.

"இறந்து போனவனுக்கு எவ்வளவு வயசிருக்கும் டாக்டர்?"

"யங் ஏஜ்தான்... இருபத்தஞ்சிலிருந்து முப்பதிற்குள்..."

"உடம்புலே வேறு காயம் ஏதாவது இருக்கா டாக்டர்...?"

"நோ.."

"பாய்சனிங் சிம்டம்ஸ்"

"எக்ஸ்டர்னலா பார்த்தா தெரியலை... இன்டெர்னல் ஆர்கன்ஸை கொஞ்சம் கலெக்ட் பண்ணி கெமிக்கல் டெஸ்டுக்கு அனுப்பிப் பார்க்கணும்..."

உடம்பு ஒரு கோணிப் பையில் முட்டையாய் கட்டப்பட்டு மார்ச்சுவரி வேனுக்குள் ஏற்றப்பட்டுக் கொண்டிருக்க... விவேக்கும் கோகுல்நாத்தும் உயர்ந்த மண் சரிவில் ஏறி ரோட்டில் நிறுத்தப்பட்டிருந்த பைக்குக்கு வந்தார்கள்.

கோகுல்நாத் கேட்டார்.

"என்ன விவேக் இந்த கேஸை டீல் பண்ணப் போறீங்களா?"

"இன்னும் மூணுநாள் மெட்ராசில் தான்
தங்கியிருக்கணும்... ஸ்பாட்டிலிருந்த
போலீஸ் கமிஷனர் ஆர்தர் நாளைக்குச்
சாயந்திரம் தான் வரப்போகிறார்... அவர்
வந்துட்டு பேசிறவரைக்கும் இந்தக் கேஸை
அலசித்தான் பார்க்கலாமே..."

"உடம்புலே எந்தத் துணியுமில்லாமே
பாடி கெடந்திருக்கு... முகமும் அடை
யாளம் தெரியலே இந்தக் கேஸை நாம எப்
படி அணுகப் போறோம்...?"

"இந்த தாயத்தை வச்சுத்தான்..."

கையிலிருந்த தாயத்தைக் காட்டினான்
விவேக்...

கோகுல்நாத் சிரித்தார்.

"அந்தத் தாயத்தை வெச்சிக்கிட்டு
என்ன பண்ண முடியும் விவேக்..."

'அவன் உடம்பிலிருந்து கிடைச்ச
ஒரே தடயம் இந்த தாயத்துத்தான். அதைவ
சுத்தான் நாம ஏதாவது பண்ணியாக
ணும்..."

சொன்ன விவேக்கை நம்பிக்கையில்லா
மல் பார்த்தார் கோகுல்நாத்.

○ ○ ○



# 8

ஏர்க் கண்டிஷனர் மெலிதாய் உறுமிக்
கொண்டிருக்க - பேப்பர் வெயிட்டை சுழற்
றியபடியே எதிரே உட்கார்ந்திருந்த நந்தி
னியை பார்த்தபடி டிக்டேட் செய்துக்
கொண்டிருந்தான் அமர்.

முப்பது வயதான அமர் அந்த டிராக்டர்
கம்பெனிக்கு மானேஜர். அடர்த்தியான
தலைக் கேசம். கோதுமை நிற உடம்பு.
பென்சில் மீசை, வரிவரியான டை.

"வித் ரெபரன்ஸ் யுவர் லெட்டர் டேட்
டட். வீ... கேம்... டு... நோ"

அவன் வேகமாய் உதிர்த்த வார்த்தைக
ளைச் சுருக்கெழுத்தில் ஒறுக்கிக் கொண்டி
ருந்த நந்தினி அன்றைக்கு வெளிர் மஞ்சள்
நிற க்ரிம்ப் சேலையில் இருந்தாள்.

உயர்த்திப் போட்ட எலுமிச்சம்
கொண்டை, கழுத்தில் பாசிமணி மாலை.
காதுகளில் பிளாஸ்டிக் ஸ்டட்ஸ். கையில்
லாத ஜாக்கெட்டில் தோள்கள் இரண்டும்
எண்ணெய் பூசிவிட்ட மாதிரி மினுமினுப்
பாய் தெரிய மார்புகளின் பரிமாணம் அம
ரின் மூச்சையடைத்தது.

அவளைக் கொஞ்சம் கொஞ்சமாய் ரசித்
துக் கொண்டே கடிதத்தை டிக்டேட் செய்து
முடித்தான் அமர்.

"அவ்வளவதுதானா சார்?"

கேட்டுக்கொண்டே எழ முற்பட்டாள் நந்தினி.

"அவ்வளவுதான். ஒரு நிமிஷம் உட்கார் நந்தினி... உன் கூடப் பேசணும்..."

நந்தினி தயக்கமாய் உட்கார்ந்தாள். தன் பெரிய கண்களால் அமரை ஒரு விநாடி பார்த்துவிட்டு கேட்டாள்.

"என்ன சார் பேசணும்...?"

"இந்த ஒரு வார்மா உன்னைப் பார்த்துட்டு வர்றேன்... உன்னோட முகத்திலே அந்தப் பழைய சிரிப்பில்லை... ஏதோ மெக்கானிக்கலா வர்றே. போறே, என்ன விஷயம்?"

"ஒண்ணுமில்லே சார்..."

"நீ ஒண்ணுமில்லே சொன்னா நான் ஏத்துக்கணுமா...? கமான்... ப்ளீஸ் ஸ்பீக் அவுட் த ட்ரூத்... உம் மனசுலே எது இருந்தாலும் நீ என் கிட்டே சொல்லலாம்."

"அ...அ...அது வந்து..."

"ம்... சொல்லு..."

"வீட்டை பேங்க்லே அடமானம் வெச்சு ஒரு பத்தாயிரம் ரூபா கடன் வாங்கியிருந்தேன் சார். பேங்க்காரங்க எவ்வளவோ டயம் கொடுத்தும் எங்களாலே திருப்பிக் கட்ட முடியலை. போன வாரம் ஏல நோட்



டீஸ் வந்திருக்கு. அண்ணனும் நானும் என்ன பண்றதுன்னு தெரியாம முழிச்சிட்டிருக்கோம்."

"வீட்டு பேர்ல எப்போ கடன் வாங்கினீங்க...?"

"அப்பாவும் அம்மாவும் உயிரோடு இருந்த காலத்திலேயே அவங்க வைத்தியச் செலவுகளுக்காக வீட்டை அடமானம் வெச்சோம்."

"உன்னோட அண்ணன் எங்கே வேலை பார்க்கறதா சொன்னே?"

"பி அண்ட் சி மில்லில் சூப்பர் வைசரா ஒர்க் பண்றார்."

"என்ன சம்பளம் வாங்கறார்?"

"ஆயிரத்து ஐநூறு."

"நீங்களும் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் வரைக்கும் நம் கம்பெனியில வாங்கறீங்க. பணத்தைச் சிக்கனம் பண்ணி கொஞ்சம் கொஞ்சமா கட்டியிருக்கலாம்."

"வெளியேயும் கொஞ்சம் கடன் இருக்கு சார்..."

"அமர் பேப்பர் வயிட்டை வேகமாய் ஒரு முறை சுழற்றிவிட்டான்.

"நம்ம கம்பெனி ரூல்படி வேலைக்கு சேர்ந்த மூணு வருஷம் ஆனவங்களுக்குத்

தான் லோன் உனக்கு நான் உதவணுமென்றால் பர்சனலாத்தான் உதவ்ணும்...''

மௌனமாய் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தாள் நந்தினி.

''பேங்குக்கு எவ்வளவு பணம் கட்டணும்?''

''வட்டியோடு சேர்த்து பதினாலாயிரம்''

''என்னிக்குள்ள கட்டணும்?''

''நாளைக்குத்தான் கடைசி நாள்...''

'சரி, நாளைக்குக் காலையிலே பதினோரு மணிக்கு நீ பணத்தை வாங்கிக்கலாம்.''

''சார்...''

கண்களிலே நீ குப்பென்று பொங்க கையெடுத்துக் கும்பிட்டாள் நந்தினி.

''ரொம்ப நன்றி சார்... மாசா மாசம் என்னோட சம்பளத்திலே பாதி பணத்தை நீங்க டிடெக்ட் பண்ணிக்கலாம் சார்...''

''நோ... நோ... உன்னோட சம்பளத்துல ஒரு பைசா கூட வேண்டாம்.''

''பி... ன்... னே...!''

''நந்தினி, நான் நேரிடையாகவே விஷயத்துக்கு வந்துடறேன்... உன்மேலே எனக்கு ரொம்ப நாளாவே ஒரு இது...''

''ஸா...ர்...''



''ஒரேயொரு தடவை...!! அதுக்கப்புறம் நான் தொந்தரவு பண்ண மாட்டேன்...''

நந்தினி அமரையே வெறித்துப் பார்த்தாள்.

அவன் தொடர்ந்தான்.

''இந்த விஷயத்தை நாம் காதும் காதும் வெச்ச மாதிரி முடிச்சுக்கலாம். வெளியே யாருக்கும் தெரியப் போறதில்லை. உன்னுடைய அண்ணன் இவ்வளவு பணம் ஏதுன்னு கேட்டா ஆபீஸ்ல லோன் கொடுத்ததா சொல்லிடு.''

''ஸ... ஸார்...''

''நான் இப்படிக் கேட்பது உனக்கு அதிர்ச்சியாகத்தான் இருக்கும். இன்னைக்கு சாயந்திரம் ஐந்து மணி வரைக்கும் யோசி. ஒரு முடிவுக்கு வா.''

நந்தினி மௌனமாய் எழுந்து கதவை நோக்கிப் போனாள்.

○ ○ ○

---

## 9

---

டி.வி. ஸ்டேஷனுக்குள் யமஹா பைக்கை நுழைத்து நிறுத்தினான். ஸ்டாண்ட் இட்டு விட்டு கோகுல்நாத்தோடு நடந்தான்.

ஏற்கனவே கவுண்டரில் நிறையப் பேர்

காத்திருந்தார்கள். பரத நாட்டிய உடை யோடு ஏழு வயது சிறுமி ஒருத்தி கண்ம ணிப் பூங்காவிற்காக ஆட வந்திருந்தாள்.

கையில் சித்தாரோடு ஒரு இளைஞன் நாட்டின் நடப்பில் மனிதர்களின் பங்குபற் றிப் பேச பா'ப் தலையோடும், ஏராளமான உடம்போடுமு ஒரு மெண்மணி, நாடக ஸ்க்ரிப்டைக் கொடுப்பதற்காக கையில் கன மான பையோடு பைஜாமா அணிந்த ஒரு இளைஞன்.

"எக்ஸ்கியூஸ் மீ..."

ஏற்கனவே கௌண்டரில் உட்கார்ந்தி ருந்த பெண் நிமிர்ந்தாள்.

"எஸ்?"

விவேக் தன் கையிலிருந்த போலீஸ் அட் டையைக் காட்டினான்.

"ஒரு கன்பர்மேஷனுக்காக டைரக்டரை பார்க்கணும்..."

"வெயிட் எ மினிட் சார்... கேட்டுக் சொல்றேன்..."

இண்டர்காமின் ரிசிவரை எடுத்து ஒரு பட்டனை தட்டி விட்டு மெலிதான குரலில் பேசினாள். பிறகு ரிசிவரை வைத்து விட்டு,

"போங்க சார்... ஹீ ஈஸ் வெயிட்டிங்" என்றாள்.

விவேக்கும், கோகுல்நாத்தும் லிப்டில்



உயர்ந்தார்கள். மூன்றாவது மாடியிலிருந்த நான்காவது அறைக்குள் கதவைத் தட்டி விட்டு உள்ளே நுழைந்தார்கள்.

டி.வி. டைரக்டர் ஜனார்த்தனம் பிஸ்கட் நிற சபாரி ட்ரஸ்ஸில் ட்ரிம்மாய் உட்கார்ந் திருந்தார். பரஸ்பரம் குட்மார்னிங் சொல்லி கை குலுக்கிக் கொண்டார்கள்.

"என்னால ஏதாவது உதவி ஆகணும்?"

"உங்க ஸ்டேஷன்லேயிருந்து ஒரு இன் பர்மேஷன் வேணும் சார்..."

"என்ன இன்பர்மேஷன்?"

"காணாமல் போனவர்களைப் பற்றி தின சரி ராத்திரி டி.வி.யில அறிவிப்பு பண்றீங்க இல்லையா...?"

"ஆமாம்."

"இந்த மாதத்துலே காணாம போனதா உங்க கிட்டே வந்து அறிவிப்புகளில் இரு பத்தைந்து வயதில் இருந்து முப்பது வயதிற் குள் யூத்ஸ் யாராவது வந்திருக் காங்களா...?"

"இன் விச் செக்ஸ்; மேல் ஆர்... ஃபீ மேல்..."

"மேல்..."

"ஒரு நிமிஷம்..."

- சொல்லிவிட்டு இண்டர்காம் ரிசீவரை எடுத்தார் டைரக்டர். பட்டனைத் தட்டிவிட்

டுப் போனார்.

"மிஸ்டர் கண்ணன் நான் எஸ்.டி., பே றேன். காணாமல் போனவர்கள் சம்பந்த பட்ட பைல் உங்ககிட்டே இருந்தா எ னோட டேபிளுக்கு கொண்டு வாங்க...'

○ ○ ○

## 10

டாக்டர் ரகுபதியின் கார் ஏர்போட்டுக் குள் நுழைந்தபோது ஆறு மணி. காரின் கத வுகளை லாக் செய்து கொண்டு சூட்கே ஸோடு லௌஞ்சை நோக்கி நடந்தார்கள் அமிர்தமும், ரகுபதியும், அமிர்தம் சொன் னான்.

"என்னால உங்களுக்கு ரொம்பவும் சிர மம் சார்..."

"இதே வாக்கியத்தை ரெண்டு டஜன் தடவை சொல்லிட்டே..."

சிரித்துக் கொண்டே லௌஞ்சுக்கள் நுழைய முயன்ற விநாடி வாசலில்ஒரு அறி விப்பைத் தாங்கிய ப்ளாக் போர்டு வழிம றித்து நின்றிருந்தது.

பைலட் சாகரை டில்லி விமான நிலையத் தில் வைத்து மந்திரி ஒருவர் மிகமோசமான வார்த்தைகளில் திட்டியதற்காக கண்டனம் தெரிவித்த அவர் மன்னிப்பு கேட்கும் வரை



பைலட்கள் வேலைக்கு திரும்ப மாட்டார் கள். பயணிகள் அசௌகரியத்திற்கு மன் னிக்க வேண்டுகிறோம். இப்படிக்கு பைலட் விங், இண்டியன் ஏர்லைன்ஸ்.

"பாழாப் போச்சு! அமிர்தம் நீ இன் னிக்கு பம்பாய் போக முடியாது. பைலட்ஸ் ஸ்ட்ரைக்ல இருக்காங்க போலிருக்கு!"

"ரிசப்ஷன் கௌண்டர்ல விசாரிச்சுப் பார்க்கலாம் வாங்க சார்..."

அமிர்தம் ரோலர்சூட்கேசை ரிசப்ஷன் கௌண்டரை நோக்கி நகர்த்திக் கொண்டு போனான்.

கௌண்டரில் சொற்பமான கூட்டம்.

டாக்டர் ரகுபதி விசாரித்தார்.

"பம்பாய் ஃபிளைட் இன்னிக்கு புறப்ப டுமா? புறப்படாதா...?"

பொன்னிறக் கூந்தலை தன் இடது கையால் கோதிக் கொண்டே சாக்லேட் குர லில் அந்த ரிசப்ஷனிஸ்ட் சொன்னாள்.

"மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக் கிறது. பம்பாய் ஃபிளைட் இன்று இரவு பதி னோரு மணிக்கு பறப்படும்..."

"அந்த விமானம் ரத்து ஆகாதே..."

"நிச்சயமாய் ரத்து ஆகாது..."

"சரி, வா... அமிர்தம்... நம்ம வீட்டுக்கே போகலாம்... பத்து மணி வரைக்கும்

வீடியோ டெக்ல ஏதாவது ஒரு படத்தைப் பார்த்துட்டு மறுபடியும் ஏர்போட்டுக்கு வருவோம்..."

அமிர்தம் தலையாட்டினான்.

○ ○ ○

## 11

டி.வி. ஸ்டேஷன் டைரக்டர் ப்ரோக்ராம்ஸ் கண்ணன் நீட்டிய பைலை வாங்கிக் கொண்டார். பிரித்துத் தாள்களை புரட்டிக் கொண்டே கேட்டார்.

"ஒரு மாசத்துக்குள்ளே காணாம போனவர்களைப் பத்தி சொன்னா போதுமா மிஸ்டர் விவேக்...?"

"அதிலும் எல்லாரைப் பத்தியும் சொல்ல வேண்டியதில்லை சார். குழந்தைகளையும் பெண்களையும் விட்டுடலாம். காணாமப் போன இளைஞர்களை மட்டும் சொன்னா போதும்..."

பைலைப் புரட்டிக் கொண்டே வந்தார் டைரக்டர்.

விவேக்கும் கோகுல்நாத்தும் அவருடைய முகத்தையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்கள்.

அறைக்குள் கனமான மௌனம்.

தாள்கள் மட்டும் புரட்டப்படும் சத்தம் கேட்டது.



மூன்று நிமிஷம் முழுசாய் கரைந்திருந்த போது - பைலைப் புரட்டுவதை நிறுத்தினார் டைரக்டர்.

"ஹியர் ஈஸ் ஏ சேப்... நோட் பண்ணிக்கிங்க மிஸ்டர் விவேக்..."

விவேக் டைரியைப் பிரித்து வைத்துக் கொண்டான்.

டைரக்டர் சொன்னார்.

"காணாம போனவன் பெயர் முகேஷ். பணக்கார வீட்டுப் பையன்..."

"அட்ரஸ்?"

"நோட் பண்ணிக்கிங்க..."

டைரக்டர் முகேஷின் அட்ரஸை நிதானமான குரலில் சொல்ல... விவேக் அதைக் குறித்துக் கொள்ள ஆரம்பித்தான்.

கோகுல்நாத் எட்டிப் பார்த்து அந்த அட்ரஸை மனசில் வாங்கிக் கொண்டார்.

○ ○ ○

## 12

சி.பி.ஐ. ஆபீசர் பரத் மெஹ்ராவிடம் ஏமாந்து போனதால் வாசுதேவன் நிரம்பவும் கொதித்துப் போயிருந்தார். 'பாஸ்டர்ட்' என்று சொல்லி நான்கைந்து தடவை கண்ணாடி மேஜையைக் குத்தி - மேஜையின்

மேலிருந்த பொருள்களை அலற வைத்தா

அறைக் கதவைத் தட்டிவிட்டு முகே உள்ளே வந்தான். அவன் பின்னாலே பேட்டை ரௌடி கோவிந்தன் கழுத்தில் க டின கர்சிப்போடு பின் தொடர்ந்துவந்தான் சாராயம் குடித்துக் குடித்து இரத்தமா சிவந்து போன விழிகளில் லேசாய் அழுக் நிறம். பீடிப் புகையில் குளித்துக் குளித்த கறுப்பேறிய உதடுகள்.

"கும்புடறேன் சார்..."

"வா... கோவிந்து..." என்று வரவேற்ற வாசுதேவன். கையில் இருந்த சிகரெட்டை ஆஷ்ட்ரேக்கு கொடுத்துவிட்டு,

"உன்னால ஒரு காரியம் ஆகணும்" என்றார்.

"சொல்லுங்க சார்..."

"ஒரு ஆளை முடிக்கணும்..."

"முடிச்சுடலாம் சார்... ஆள் யாரு..."

"அவன் ஒரு சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ஆபீசர். விவகாரத்தை ரொம்பவும் சாமர்த்தியமா முடிக்கணும்..."

"நீங்க அதைப்பத்தி கவலைப்படாதீங்க சார். எப்படி முடிக்கணும்னு மாத்திரம் சொல்லிடுங்க போதும்..."

வாசுதேவன் வாட்ச்சைப் பார்த்துவிட்டு முகேஷிடம் திரும்பினார்.



"முகேஷ்... அந்த பரத் மெஹ்ராவுக்குப் போன் பண்ணு... நான் சொல்லிக் கொடுத்த மாதிரி பேசு..."

முகேஷ் டெலிபோனை நெருங்கி ரிசீவரை எடுத்தான். டயலைச் சுற்றிவிட்டுக் கேட்டான்.

"ஹோட்டல் கோரமண்டல்?"

"எஸ்..."

"ரூம் நெம்பர் நானூத்திப் பத்து... மிஸ்டர் பரத்மெஹ்ரா ப்ளீஸ்..."

"ப்ளீஸ் பி ஆன் தி லைன்..."

நிமிஷ நேரத்திற்குப் பிறகு -

"எஸ்... ஐயாம்... பரத்மெஹ்ரா... ஹியர்..."

"சார், நான் முகேஷ்..."

"ஓ... நீங்களா... ஃபாதரும், சன்னும் ஒரு முடிவுக்கு வந்துட்டீங்களா...?"

"வந்துட்டோம் சார்..."

"என்ன முடிவு...?"

"நீங்க சொன்ன ரேட்டுக்கு ஒத்துக்கிறோம் சார்..."

"குட்..."

"வீட்டுக்கு வந்து கேஷ் வாங்கிக்கறீங்களா...?"

"சரி... எத்தனை மணிக்கு வரட்டும்..?"

"எட்டு மணிக்கு வர முடியுமா?"

"வர்றேன்..."

"தேங்க் யூ சார்..."

ரிசீவரை வைத்துவிட்டு புன்னகையோடு தன் அப்பாவை ஏறிட்டான் முகேஷ்.

"வர்றேன்னு ஒத்துக்கிட்டான்."

"கோயிந்து..." வாசுதேவன் கூப்பிட்டார்.

"சார்"

"இப்படி எம் பக்கத்துல வா..."

அவன் வந்தான்.

"நான் சொல்லப் போறதை நல்லா கவனி..."

○ ○ ○

## 13

யமஹாவில் பீறிட்டுக் கொண்டிருந்தார்கள் விவேக்கும், கோகுல்நாத்தும். சென்னையின் புறநகர் பகுதி அது.

சாயந்திரக் காற்று இருள்வரையும் ஜோராய் அலம்பியது.

"விவேக்"

"ம்..."

"முகேஷ் காணாமே போனதைப் பத்தி போலீஸுக்கு ஒரு கம்ப்ளைண்ட்டும் வரலை.



ஆனா டி.வி. ஸ்டேஷனுக்கு மாத்திரம் அறிவிப்பு கொடுத்திருக்காங்க..."

"போலீஸ் வரைக்கும் விவகாரம் போகக் கூடாதுன்னு அவங்க நினைச்சிருக்கலாம்.:."

சொன்ன விவேக் பைக்கின்வேகத்தைக் குறைத்து எக்ஸ்டன்ஷன்ல மூன்றாவது குறுக்குத் தெருவுக்குள் நுழைந்தான்.

"வீட்டு நம்பர் என்ன கோகுல்நாத்?"

"இருபத்தி மூணு"

விவேக்கையும் கோகுல்நாத்தையும் பார்த்ததும் வரவேற்பறையின் சாய்வுநாற்காலியில் உட்கார்ந்து பேப்பர் பார்த்துக் கொண்டிருந்த அந்த நடுத்தர வயதுப் பெண் எழுந்து வந்தாள்.

ஈனக்குரலில்கேட்டாள்.

"யார் வேணும்...?"

"நாங்க போலீஸிலிருந்து வர்றோம்... காணாமப் போன முகேஷைப் பத்தி டி.வி.யில் அறிவிப்பு குடுத்தது நீங்க தானே...?"

"ஆமா..."

"முகேஷ் உங்களுக்கு என்ன ஆகணும்?"

"என்னோட சன்தான் அவன்..."

"காணாமே போய் எத்தினி நாளிருக்

கும்...?''

''அவன் காணாமல் போகலை சார்... பிரண்ட்ஸ்களோடு சேர்ந்துக்கிட்டுகோவா வரைக்கும் ஜாலி ட்ரிப் போயிட்டான்... நேத்திக்குத்தான் வீட்டுக்கு வந்தான்.''

''முகேஷ் வீட்டுக்கு வந்தாச்சா?''

விவேக் கேட்டுக் கொண்டே கோகுல் நாத்தைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினான்.

உள்ளேயிருந்து அந்த இளைஞன் வந்தான். வெளுப்பான மெலிந்த தேகம்.

டி.வி. ஸ்டேஷனில்கொடுத்த போட்டோவுக்கும் நேரில் பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசம்.

''இவன்தான் என்னோட சன் முகேஷ்...''

விவேக் நெற்றியைப் பிடித்துக் கொண்டான்.

கேஸ் மறுபடியும் இருட்டுக்குள் விழுவதை உணர்ந்தான்.

○ ○ ○

## 14

**பா**ல்கனி அவுட் புட்டில் உட்கார்ந்து ஸ்காட்சும், கோலாவும் கலந்த கலவையை டம்ளரிலிருந்து துளித்துளியாய் சப்பிக் கொண்டிருந்த அமர், பின்பக்கமாய் எழுந்த வளையல் சத்தம் கேட்டுத் திரும்பினான்.

அவனுடைய தங்கை ரோகிணி நைட்டியில் தெரிந்தாள்.

''அண்ணா...''

''ம்...''

''உன்னைப் பார்க்கிறதுக்காக யாரோ ஒருத்தர் வந்திருக்கிறார்.''

யோசித்துக் கொண்டே மாடிப் படிகளில் இறங்கி வந்தான். ஹாலுக்கு வந்ததும் சோபாவில் உட்கார்ந்திருந்த அவன் எழுந்து கைகளைக் குவித்தான். தோளில் ஒரு ஜோல்னாப் பை.

''வணக்கம் சார்.''

''யார். நீங்க?''

''எம்பேர் துரைராஜ் சார்''

''சரி... என்ன வேணும்...?''

''உங்க கூட கொஞ்சம் பேசணும் சார்...''

வேண்டா வெறுப்பாய் அமர் உட்கார அவன் தோளில் தொங்கிக் கொண்டிருந்த ஜோல்னாப் பையில் கையை நுழைத்து ரூபாய் நோட்டுக் கற்றைகளை டீப்பாயின் மேல் எடுத்து வைத்தான்.

''என்ன இது...?''

''பணம்! தெரியலையா மிஸ்டர் அமர்...?''

''அதான் எதுக்குன்னு கேக்குறேன்...''

''அதுல மொத்தம் பதினாலாயிரம் ரூபா இருக்கு. இதை எடுத்து உன்னோட இரும்புப் பெட்டியில வெச்சுக்கிட்டு உன் தங்கையை என்னோட அனுப்பி வை.''

அமர் ஆவேசமானான்.

''என்னடா சொன்னே...?''

மேலே பாய்ந்து அவனுடைய சர்ட் காலரைப்பிடித்தான். அவன் புன்னகைத்தான்.

''எதுக்காக கோபப்படறே அமர்...? உன்னோட எண்ணப்படி பதினாலாயிரம் ரூபா குடுத்தா எந்த வீட்டுப் பெண்ணையும் தொட்டுக்க கூப்பிடலாம் தானே?''

அமரின் கை மெல்ல தளர்ந்தது.

''நீ...நீ... நீ...?''

''நான் நந்தினியோட அண்ணன் துரை ராஜ்?''

அமர்க்கு குப்பென்று வியர்த்தது.

துரைராஜ் கூர்மையாய் அவனைப் பார்த்தான்.

''நீயெல்லாம் ஒரு பெரிய மனுஷன் வீட்டுப் பையன் எவளாவது கண்ணுக்கு லட்சணமா இருந்தா... கரன்சியாலே அடிச்சிடலாம்னு நினைச்சியா? என்னோட தங்கச்சிக்கு நீ பதினாலாயிரம் குடுத்தா நானும் உன்னோட தங்கச்சிக்கு பதினாலாயிரம் குடுக்க தயார்... ம்... பணத்தை எடுத்துவெச்சுக்கிட்டு உன்னோட தங்கச்சியை என்கூட அனுப்பி வை...''

உள்ளேயிருந்து ரோகிணி ஓடி வந்தாள்.

துரைராஜைப் பார்த்து கைகூப்பினாள்.

''ப்ளீஸ்.. என்னோட அண்ணன் சார்பில் உங்கிட்டே நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன்... தயவு பண்ணி போயிடுங்க...''

○ ○ ○

## 15

**ஸ்**க்ரு டிரைவரால் கையிலிருந்த அந்த வெள்ளித் தாயத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் நெம்பி அதை ஒரு சதுர அங்குல பரப்புக்கு விரித்தான்விவேக்.

உள்ளே ஓலை மாதிரி ஏதோ ஒரு சீட்டு.

''கோகுல்நாத் இதைப்பாருங்க...''

கோகுல்நாத் வாங்கிப் பார்த்துவிட்டுச் சொன்னார்.

''நிறைய ஓம் ஓம்னு எழுதியிருக்காங்க. இதை வெச்சுக்கிட்டு ஆள் யார்னு எப்படி கண்டு பிடிக்க முடியும் விவேக்? இது ஒரு பிரயோஜனமில்லாத தடயம்...''

விவேக் புன்னகைத்தான்

''இதை வெச்சே நாளை காலை பத்து

மணிக்குள்ளே செத்தது யார்னு கண்டு பிடிச்சிடலாம்.''

○ ○ ○

## 16

**ரா**த்திரி ஒன்பது மணி.

டெக்கில் சங்கராபரணம் கேசட் சொருகப்பட்டிருக்க டெலிவிஷன் திரையில் சோமயாஜுலு 'சங்கரபரணமு' என்று பாடிக் கொண்டிருந்தார்.

பதினைந்தடி தொலைவில் போடப்பட்டிருந்த சோபாக்களில் அமர்த்தமும் டாக்டர் ரகுபதியும் உட்கார்ந்திருந்தார்கள்.

டெலிபோன் கூப்பிட்டது.

ரகுபதி எழுந்து போய் ரிசீவரை எடுத்தார்.

''ஹலோ...''

''டாக்டர் ரகுபதி...''

''ஹோல்டிங்...''

''டாக்டர், நீங்க உடனடியா கல்பனா நர்சிங்ஹோமுக்கு வரணும். நீங்க அட்மிட் பண்ணின பேஷண்ட் ராமமூர்த்திக்கு நிலைமை ரொம்பவும் சீரியசா இருக்கு...''

ரகுபதி திடுக்கிட்டார்.

''எப்பயிருந்து...?''



''பத்து நிமிஷமா...?''

''நான் உடனே புறப்பட்டு வர்றேன்...'' சொன்ன ரகுபதி ரிசீவரை சட்டென்று சார்த்தி விட்டு அமிர்தத்திடம் வந்தார்.

''அமிர்தம்...''

''ஸார்...''

''நீங்க படம் பார்த்திட்டிருங்க... நான் கல்பனா நர்சிங் ஹோம் வரைக்கும் போயிட்டு வந்துடறேன்.''

அடுத்த சில நிமிடங்களில் கார் வேகமாய் புறப்பட்டுப் போகும் சத்தம் கேட்டது.

○ ○ ○

## 17

**வா**சுதேவன் சொல்லிக்கொண்டிருந்தார்.

''நல்லா கவனி கோயிந்து... சரியா எட்டு மணிக்கு அந்த சி.பி.ஐ. ஆபீசர் வருவான். நீ பக்கத்து ரூம்ல கையிலே பிஸ்டலோட ஒளிஞ்சு நின்னுக்கிட்டு அவனை வாட்ச் பண்ணப் போறே. அவன் சாப்பிட்டு முடிச்சதும் கையைக் கழுவிக்கிறதுக்காக வாஷ்அ பேசின்கிட்டே வருவான்... நீ உன் கையிலே இருக்கிற சைலன்சர் பிஸ்டலாலே அவனைத் தீர்த்துக் கட்டறே...''

கோயிந்து தலையாட்டிக் கொண்டிருக்க

வாசுதேவன் தொடர்ந்தார். ''அவனைத் தீர்த்துக் கட்டறது ரொம்பவும் சுலபமான வேலை கோயிந்து... ஆனா டிஸ்போஸ் பண்றதுதான் பெரிய வேலை... அதைத் தான் நீ சாமர்த்தியமா பண்ணனும்...''

''அதைப்பத்தியெல்லாம் நீங்க கவலைப் படாதீங்க... சார... போலீஸ் மோப்பம் பிடிக்க முடியாதபடிக்கு பாடியை டிஸ் போஸ் பண்ண நானாச்சு...''

''அதைப்பத்தியெல்லாம் நீங்க கவலைப் படாதீங்க சார்... போலீஸ் மோப்பம் பிடிக்க முடியாதபடிக்கு பாடியை டிஸ்போஸ் பண்ண நானாச்சு...''

''பாடியை எப்படி டிஸ்போஸ் பண் ணுவே கோயிந்து...?''

''கூவத்துக்கு பக்கத்துல எத்தனையோ இடம் இருக்கு சார்... டிஸ்பேர்ஸ் பண்ற தைப் பத்தி நீங்க ஏன் சார் கவலைப்பட றீங்க...?''

கோயிந்து சிரித்துக் கொண்டே சொன் னான்.

○ ○ ○

## 18

இங்கே பில்லி, சூன்யம், பேய், பிசாசு, காத்து கறுப்பினால் பாதிக்கப்பட்ட நபர்க



ளுக்கு மந்திரித்து தாயத்து கட்டப்படும்.

தலைக்கு மேலே பளிச்சென்ற எழுத்துக் களோடு போர்டு தெரிய அதற்கு முன்னால் பச்சைத் தலைப்பாகை கட்டிக் கொண்டு அந்தப் பெரியவர் உட்கார்ந்திருந்தார். நான் கைந்து பெண்கள் கைக்குழந்தைகளோடு காத்திருந்து தாயத்து கட்டிக் கொண்டு போனதும் விவேக்கும், கோகுல்நாத்தும் அவரை நெருங்கினார்கள்.

விவேக் தன் கையிலிருந்த தாயத்தை அவரிடம் காட்டினான்.

''பெரியவரே! இதைக் கொஞ்சம் பாருங்க. இந்த தாயத்து நீங்க கட்டி விடற தாயத்தா? இல்ல வேற யாராவது கட்டி விடற தாயத்தா?''

நரை புருவங்கள் சுருங்க பெரியவர் அதைக் கையில் வாங்கிப் பார்த்தார். அடுத்த விநாடியே சொன்னார்.

''எதுக்காக கேக்கறீங்க?''

''நாங்க போலீஸ், ஒரு கொலையா ளியை கண்டு பிடிக்கிறதுக்காக விசாரணை பண்ணிட்டிருக்கோம்.''

''ஆயிரம் விளக்குல ரெண்டு பேர் இருக் காங்க. ஒருத்தர் பேரு மீரான் சாயபு. இன் னொருத்தர் தஸ்தகிர் பாய்.''

''பெரியவரே... அந்த தகட்டுல ஓம்...ஓம்... என்கிற எழுத்துக்கள் தான்

தெரியுது. இந்த தாயத்தை ஒரு முஸ்லீம் தயாரிச்சிருக்க முடியாது: தாயத்து தயாரிக்கிற இந்துஸ் யாரையாவது உங்களுக்கு தெரியுமா?''

பெரியவர் சிறிது நேரம் யோசித்து விட்டு சொன்னார்.

''மாம்பலம் ரங்கநாதன் தெருவுல ஒருத்தர் இருக்கார். அவர் பேர் ராஜாக்கனி. அவர் கிட்டே கேட்டா... நீங்க கேக்கிற விவரமெல்லாம் கிடைக்கும்.''

''ரொம்ப நன்றி பெரியவரே...''

விவேக்கும் கோகுல்நாத்தும் அங்கிருந்து நகர்ந்து ரோட்டோரமாய் நிறுத்தியிருந்த பைக்குக்கு வந்தார்கள்.

○ ○ ○

## 19

அவர் தன் வலது உள்ளங் கையில் இடது கை முஷ்டியைக் குத்திக் கொண்டே அறையில்உலாவிக் கொண்டிருந்தான்.

துரைராஜ் பேசிவிட்டு போன வார்த்தைகள் இன்னமும் சூடு தணியாதபடி தீக்கட்டிகளைப் போல் காதுகளிலேயே இருந்தது.

அறை வாசலில் ரோகிணி தெரிந்தாள்.

''என்னம்மா... நீ இன்னும் தூங்கலையா?''



''எப்படிண்ணா தூக்கம் வரும்? அந்த ஆள் பேசிட்டுப் போனது இன்னும் என் நெஞ்சுல அப்படியே கரிச்சுகிட்டே இருக்கு. நீ மத்த பொண்ணுகளை தங்கச்சியா நினைச்சாத்தான் மத்தவங்க உன்னோட தங்கச்சியை தங்கச்சியா நினைப்பாங்க. நீ அவங்களை விலை பேசறது எவ்வளவு மோசமான விபரீதத்துல கொண்டு வந்து விட்டுருக்கு பார்த்திங்களாண்ணா.''

அமர் எங்கோ பார்த்துக் கொண்டு சொன்னான். ''நீ போய் தூங்கம்மா. வீட்டுப் படியேறி வந்து தரக்குறைவா பேசிட்டு போன அவனை இனிமே பேசவே முடியாதபடி பண்ணிடறேன்.''

''அ... அண்... ணா...''

ரோகிணியின் குரல் நடுங்கியது.

○ ○ ○

## 20

கார் ஓடிக் கொண்டிருந்தது.

காரை ஓட்டிக் கொண்டிருந்த கிரிஜா தன் பக்கம் உட்கார்ந்திருந்த அம்சாவைத் திரும்பிப் பார்த்தாள். அம்சா பாதிவிழி சொருகிய நிலையில் கண்ணாடி வழியே ரோட்டைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அ...ம்...சா...''

''ம்...''

"பார்ட்டியில் நீ அந்த கடைசி பெக்கைச் சாப்பிட்டிருக்கக் கூடாது. பார். நிதானமில்லாமே உட்கார்ந்திருக்கே."

"டோண்ட் ஒர்ரி கிரிஜா. அயாம் ஸ்டெடி."

"உன்னோட ஹஸ்பெண்ட் டாக்டர் ரகுபதி என்னைத்தான் திட்டப் போறார். நான் பங்களாவுக்குள்ளே காரைக் கொண்டுட்டு வரமாட்டேன். காம்பௌண்ட் கேட் ஓரமா நிறுத்தி உன்னை இறக்கிவிட்டுட்டு போயிடுவேன்..."

அம்சா போதை சிரிப்பு சிரித்தாள்.

"அந்தக் கிழட்டுக் கணவனைப் பத்தி நீ கவலைப்படாதே கிரிஜா. அது எதுவுமே சொல்லாது."

"அம்சா. இருப்த்தைந்து வயசு கூட நிறையாத நீ எப்படி அவருக்கு ரெண்டாந் தாரமா வாழ்க்கைப்பட்டே..."

"எல்லாம் என்னோட தலைவிதி... அந்த மனக் கஷ்டத்தையெல்லாம் மறக்கிறதுக்காக அப்பப்ப இந்த பார்ட்டிகளை அட்டெண்ட் பண்ணி குடிக்கிறதுக்கு கஷ்டமாயிருந்தாலும் குடிக்கிறேன்."

கார் போக்குவரத்து வெறிச்சோடிப் போயிருந்த ரோடுகளில் ஓடி அந்த பங்களாவின் காம்பௌண்ட் கேட் அருகே வந்து நின்றது.



"இறங்கு அம்மா... வீடு வந்தாச்சு..."

"ஓ... கே. தாங்க்யூ. குட் நைட். நாளைக்கு காலையில கிளப்புல பார்க்கலாம்."

"குட் நைட்..."

"குட் நைட்."

காரின் கைப்பிடியைத் திறந்து கொண்டு கீழே இறங்கினாள். கதவை அறைந்து சாத்திவிட்டுத் தள்ளாட்டமாய் நடந்து உள்ளே போனாள். போர்டிகோ படிகளில் ஏறி காலிங் பெல்லின் மேல் கையை வைக்க அது நீளமாய் அலறியது.

கதவு திறக்கப்பட -

உள்ளே நின்றிருந்த அமிர்தத்தைப் பார்த்ததும் போதை கண்களைக் கூர்மையாக்கி

"யாரு?" என்று கேட்டாள்.

"நான்... அமிர்தம்..."

"ஓ... ஓ... நீங்களா...? பிளேபேக் சிங்கர்."

"ஆ... ஆமா..."

"எ... எப்ப... வந்தீங்க...?"

"ஆறு மணிக்கே வந்துட்டேன்"

- வந்தவன் ஒரு நிமிஷ அவகாசத்தில் எல்லாவற்றையும் சொல்லி முடித்தான்.

தள்ளாட்டமாய் நின்று கொண்டே எல்

லாவற்றையும் கேட்டு முடித்த அம்சா மெல்லிய குரலில் கேட்டாள்.

"அவர் இப்பத்தான் பேஷண்டைப் பார்க்கப் போனாரா...?"

"ஆமா."

"சா... சாப்பிட்டீங்களா?"

"ம்... சாப்பிட்டேன்."

"டெக்ல சங்கராபரணம் பார்க்கறீங்களா...? ஒன்மினிட் நானும் ட்ரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வந்துடறேன்."

சொல்லிக் கொண்டே சுவரைப் பிடித்துக் கொண்டு தள்ளாட்டமாய் நடந்து படுக்கையறைக்குள் போனாள்.

சேலைத் தலைப்பு அலங்கோலமாய் நழுவியிருந்தது.

அமிர்தம் மறுபடியும் சோபாவுக்கு வந்து உட்கார்ந்தான். டி.வி. திரையில் சோமயாஜுலு சாஸ்திரிய சங்கீதத்திற்கு ஏதோ விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஐந்து நிமிஷ நேரம் கரைந்திருந்த போது,

அம்சா படுக்கையறையிலிருந்து அந்த சத்தம் கேட்டது. ஏதோ ஸ்டூல் ஒன்று உருண்டு விழும் சத்தம். அதைத் தொடர்ந்து.

"அம்மா... ஆ..." என்ற அம்சாவின் அலறல்.



அமிர்தம் திடுக்கிட்டுப் போய் எழுந்தான். நான்கே எட்டிப் படுக்கையறையைத் தொட்டு உள்ளே நுழைந்தான்.

○ ○ ○

## 21

கையில் பிஸ்டலோடு கோயிந்து பக்கத்து அறையில் கதவோரமாய் நின்றிருந்த முன்புற அறையில் வாசுதேவனும் முகேஷும் காத்திருந்தார்கள்.

சரியாய் எட்டு மணிக்கு -

ஒரு டாக்ஸி பிறிட்டு வந்து போர்டிகோவில் நிற்க அதிலிருந்து பரத் மெஹரா இறங்கினார். கையில் சின்னதாய் ஒரு சூட்கேஸ்.

"வாங்க சார்."

வாசுதேவனும் முகேஷும் வாசலுக்கு ஓடிப்போய் கைகளைக் குவித்து வரவேற்றார்கள்.

கதவில் இடுக்கில் சிவப்பாய் தெரிந்த கோயிந்தனின் கண்களைச் சந்தித்தார் வாசுதேவன். சைகை காட்டிக் கொண்டே பரத் மெஹராவிடம் சொன்னார்.

"வாஷ் பேசின் அங்க இருக்கு சார். போய் கையை வாஷ் பண்ணிட்டு வாங்க லைட்டா டின்னர் சாப்பிடலாம்."

"எனக்கு வெறும் சூப் மட்டும் போதும்"

- சொல்லிக் கொண்டே வாஷ்பேசினை நோக்கி நடந்தார்.

கோயிந்தன் பிஸ்டலை தயார் நிலையில் வைத்துக் கொண்டான்.

○ ○ ○

## 22

கோமதி நாயகம் - விவேக்கின் கையில் இருந்த தாயத்தை வாங்கிப் பார்த்துவிட்டு - ஒரு லென்ஸ் கண்ணாடியால் - அதன் எழுத்துக்களை ஆராய்ந்து விட்டு நிமிர்ந்தார். அறுபது வயது. முழு வழுக்கை, வெற்று மார்பு. காவி வேஷ்டி - ரோமத்துக்குள் சிக்கியிருந்த முகம். வாய்க்குள் பொய்ப் பல்செட்.

"அது அநேகமா நல்ல முத்து தயாரிச்ச தாயத்தாய்த்தான் இருக்கணும்... அவன் தான் 'ஒ'வன்னாவை இப்படிப் போடு வான்."

"யாரது நல்லமுத்து?"

"என்னோட சிஷ்யன்..."

○ ○ ○



## 23

அமர் அந்த ராத்திரி பதினோரு மணி நேரத்தில் ஒரு மரத்தின் கீழே ரோட்டோர மாய் காரை நிறுத்திக் கொண்டான்.

தலையில் பனிக்குல்லா, உடம்பில் கன மான கோட்டு.

பி.எண்.ஏ. மில்லிலிருந்து ஆஃப் நைட் ஷிப்ட் முடிந்து அந்த துரைராஜ் நான்கு நாட் களாய் அந்த வழியில் போவதை மோப்பம் பிடித்துக் கொண்டு இன்றைக்கு ஐந்தாவது நாள் நடு ரோட்டில் சமாதி கட்ட காரில் வந் திருந்தான் அமர்.

சரியாய் 11-15க்கு அந்த தெரு முனை யின் திருப்பத்தில் துரைராஜின் சைக்கிள் வெளிச்சம் தெரியும்.

இரண்டு நிமிஷ அவகாசத்தில் காரைத் தாண்டுவான்.

கையிலிருந்த பிஸ்டலை உயர்த்தி 'விஷ்ஷ்ங்' சைலன்சர் சத்தமில்லாமல் தோட்டா ஒன்றை அவனுடைய மார்புக்கு கொடுக்கும்.

தோட்டாவை வாங்கிக் கொண்டு அவன் கீழே விழுந்ததும் காரை விருட்டென்று நகர்த்திக் கொண்டு போய் விட வேண்டி யது.

அமர் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக்

கொண்டான்.

விநாடிகள் கரைந்தன.

தெரு முனையில் திடீரென்று சைக்கிள் டைனமோ வெளிச்சம் தெரிந்தது. அமர் தன் கையிலிருந்த சிகரெட் துண்டை வீசி விட்டு - காரின் டாஷ் போர்டைத் திறந்து - அந்த ரிவால்வரை எடுத்துக் கொண்டான்.

டைனமோ வெளிச்சம் அசைந்து, அசைந்து வந்தது.

ரிவால்வரை சரியான கோணத்தில் வைத்துக் கொண்டான். சைக்கிள் இருபதடி தொலைவில் இருந்தபோது -

அமரின் தோளைப் பின் சீட்டிலிருந்து யாரோ தொட்ட மாதிரி இருக்கவே - திடுக்கிட்டுத் திரும்பினான்.

பன் சீட்டிலிருந்த ரோகிணி எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

"ரோ...கி...ணி..."

"நானே தான்... ரிவால்வரை மொதல்ல டாஷ்போர்ட்ல போடுங்கண்ணா..."

அவன் தயங்கினான்.

"ம்... போடுங்கண்ணா..."

அவன் டாஷ் போர்டுக்குள் எரிச்சலாய் போட்டான்.

"காரை எடுங்க..."

"ரோ...கி...ணி... நீ எப்படி...?"



"சொல்றேன்... மொதல்ல காரை எடுங்க."

அமர் கோபமாய் காரை நகர்த்தினான். கார் வேகமெடுத்து தெரு முனையைத் தாண்டியதும் உறுமினான்.

"நீ எப்போ காருக்குள்ளே ஏறின?"

ரோகிணி புன்னகைத்தாள்.

"நான் தூங்கிட்டேன்னு நினைச்சு... வாசல் கதவை நீங்க பூட்டிட்டிருக்கும் போதே நான் பின் சீட்டுக்கு அடியில் நுழைஞ்சுட்டேன். சாயந்தரம் ஏழு மணிக்கு மேலே நீங்க வெளியே போய்ட்டு வந்ததுமே - பீரோவைத் திறந்து பிஸ்டலை எடுத்துப் பார்த்திட்டிருந்தீங்க... உங்களால அந்த துரைராஜுக்கு ஏதோ ஒரு முடிவு வரப்போகுதுன்னு அந்த நிமிஷமே தீர்மானம் பண்ணி உங்களை கண்காணிக்க ஆரம்பிச்சேன்..."

"ரோகிணி...! அவன் நம்ம வீட்டுப் படியேறி வந்து என்ன பேச்சு பேசிட்டு போனான் பார்த்தியா...?"

"அதுக்கு யார் காரணம்? நீங்க தானே...? இதோ பாருங்கண்ணா. இந்த கொலை முயற்சி அநாவசியமான ஒண்ணு. நீங்க அடம்பிடிச்சு அவனை சுட்டீங்கன்னா நானே போலீஸ்ல போய் சொல்லிடுவேன்..."

"ரோகிணி..."

"நான் சொல்றதை செய்யக் கூடிய வள்னு உங்களுக்கே நல்லாத் தெரியும்.. பேசாம காரை வீட்டுக்கு ஓட்டுங்க... இந்த விவகாரத்தை இத்தோட மறந்துடுங்க..."

"ரோகிணி நான் என்ன சொல்ல வந்தேன்னா..."

"நீங்க எதையும் சொல்ல வேண்டாம்..."

ரோகிணி சொல்லிக் கொண்டே பின் சீட்டுக்கு நன்றாக சாய்ந்து உட்கார்ந்தாள்.

கார் கூவம் ஆற்றின் மேம்பாலத்தின் மேல் ஏறியது. பாலத்திற்கு கார் வந்த போது ரோட்டின் இடது பக்கமாய் அந்தக் கார் நின்றிருக்க இரண்டு நிழலுருவங்கள் காரின் டிக்கியிலிருந்து எதையோ இழுத்துக் கீழே போட்டுக் கொண்டிருந்தார்கள்.

○ ○ ○

## 24

படுக்கை அறைக்குள் எட்டிப் பார்த்த அமர்தம் திடுக்கிட்டான்.

ஸ்டூல் ஒரு பக்கமாய் விழுந்து கிடக்க சுவரோரமாய் அம்சா விழுந்து கிடந்தாள்.

அமிர்தம் வேகவேகமாய் அவளை நெருங்கி முதுகுக்கு கை கொடுத்துத் தூக்க முயல, அம்சா அவன் கழுத்தை இரண்டு



கைகளாலும் கட்டிக் கொண்டாள்.

"அ... மி...ர்...த...ம்..."

அவள் உடம்பின் மேல் பரவியிருந்த செண்ட் அமிர்தத்தின் மூக்கை அடைத்தது.

எழ முயன்றவனைக் கால்களால் பின்னிக் கொண்டாள் அம்சா.

குழறினாள்.

"அ...மி...ர்...தம்... யூ ஆர் வெரி ஹேண்ட்சம். இந்த மாதிரியான ஒரு வாய்ப்புக்காகத்தான் ரொம்ப நாளா காத்திட்டிருந்தேன். ரேடியோவில உங்க குரலைக் கேட்கும்போதே என்னோட உடம்பெல்லாம் சூடேறும்."

அமிர்தம் அவளுடைய அணைப்பில் மூச்சு முட்டினான்.

"வேண்டாங்க, இது சரியில்லை டாக்டர் வந்துடுவார்."

"அ... அந்தக் கிழம் இ... இ... இப்போ வராது அமிர்தம். நீ வா. என்னோட எலும்பெல்லாம் நொறுங்கற மாதிரி கட்டிப் பிடி."

"வேண்டாங்க ப்ளீஸ்."

திமிறிக் கொண்டு எழ முயன்றான் அமிர்தம்.

அம்சாவும் மோக வெறியோடு அவன் உடம்போடு ஒட்டிக் கொண்டு எழுந்தாள்.

அவனை அப்படியே கட்டிலை நோக்கித் தள்ளிக் கொண்டு போனாள்.

"ஒரு பெண்ணுக்கு இவ்வளவு பலமா?"

அமிர்தம் மலைத்தான்.

"வா... அமிர்தம்... என்னை உபயோகி. இந்த வாய்ப்பு என்னிக்குமே நமக்குக் கிடைக்காது. ப்ளீஸ்..."

கட்டிலில் அவனைத் தள்ளினாள்.

அமிர்தம் நிலை தடுமாறிவிழ மல்லாந்து விழுந்தபோது தலையணை விலக அதனடியில் கறுப்பு உடம்போடு மின்னியது ரிவால்வர்.

அதே விநாடி -

போர்டிகோ வாசலில் கார் நிற்கும் சத்தம்.

அமிர்தம் கட்டிலினின்றும் குபீரென்று எழுந்தான்.

"டா...க்... டா...ர்... வந்துட்டார்."

அதிர்ந்து போன அம்சா இரண்டே எட்டில் பாய்ந்து தலையணைக்குக் கீழே இருந்த அந்த பிஸ்டலை எடுத்துக் கொண்டாள்.

○ ○ ○



## 25

பரத் மெஹ்ரா வாஷ் பேசினை நோக்கி வர கோயிந்து பிஸ்டலை உயர்த்திய அதே விநாடி வாசல் பக்கமிருந்து காலிங் பெல் கூப்பிட்டது.

பரத் மெஹ்ராநின்றார்.

"யாரது?"

வாசுதேவன் மகனைப் பார்த்தார்.

"முகேஷ் போய் யார்ன்னு பாரு. வந்தவங்க எவ்வளவு தெரிஞ்சவங்களா இருந்தாலும் சரி. நாளைக்கு வரச் சொல்லிடு."

"சரிப்பா"

கதவை நோக்கிப் போய் தாழ்ப்பாளை 'ப்ளக்'கென்று விலக்கினான்.

வெளியே -

ஒரு இன்ஸ்பெக்டர். ஒரு சப் இன்ஸ்பெக்டர். அவர்களுக்குப் பின்னால் நான்கைந்து கான்ஸ்டபிள்களின் முகங்கள்.

"எஸ்' இன்ஸ்பெக்டர்"

ஏதோ கேட்க முயன்ற முகேஷைத் தள்ளிக் கொண்டு காக்கி யூனிபார்ம்கள் உள்ளே நுழைந்தன.

உள் அறையிலிருந்து எட்டிப் பார்த்த பரத் மெஹ்ராவின் மேல் இன்ஸ்பெக்டர் பாய்ந்து அவனுடைய தலைமுடியைக்

கொத்தாய் பற்றினார்.

"ராஸ்கல்! எத்தனை நாளைக்குத்தான் நீ போலீஸ் கண்ணுல விரலை விட்டு ஆட்ட முடியும்?"

"சார்..."

ஏதோ சொல்ல முயன்ற வாசுதேவனிடம் திரும்பினார் இன்ஸ்பெக்டர். "இவன் உங்ககிட்டே தான் ஒரு சி.பி.ஐ. ஆபீசர்னு சொல்லியிருப்பாரே? ஒரு லட்சம் ரெண்டு லட்சம்னு லஞ்சம் கேட்டிருப்பாரே? வாஸ்தவமா?"

"ஆமா சார்..."

"ஹி ஈஸ் நாட் ஏ சி.பி.ஐ. ஆபீசர். இவன் ஒரு எக்ஸ் கல்பிரிட். ஊருக்கு ஊர் பேர் மாத்திக்கிட்டு உங்க மாதிரியிருக்கிற வியாபாரிகள் கிட்டே நான், ஒரு சி.பி.ஐ. ஆபீசர்னு சொல்ல வேண்டியது. ரெய்ட் வரப்போறதா மிரட்ட வேண்டியது. லட்சக் கணக்கான பணத்தை வாங்கிட்டு கம்பி நீட்ட வேண்டியது. அவனோட நிஜமான் பேரு விஸ்வநாத் திவாரி. ஏழெட்டு பாஷை தெரியும்."

வாசுதேவன் மலர்ந்தார்.

"தாங்க் யூ இன்ஸ்பெக்டர். சமயத்தில் வந்து இவனோட முகமூடியைக் கிழிச்சிங்க. எப்படி அவனை ட்ரேஸ் அவுட் பண்ணீங்க?"

"ரெண்டு நாளாவே கோரமண்டல்



ஹோட்டல்ல தங்கியிருக்கிற இவனை நாங்க வாட்ச் பண்ணிட்டுத்தான் இருந்தோம்... எட்டுமணிக்கு டிப்டாப்பா டிரஸ் பண்ணிட்டு கிளம்பியதும்... கான்ஸ்டபிள் கொடுத்த தகவல்.பேர்ல இவனை ஃபாலோ பண்ண ஆரம்பிச்சோம். ஜீப்பை காம்பௌண்ட் கேட்டுக்கு வெளியே நிறுத்திட்டு உங்க பங்களாவுக்குள்ளே நுழைஞ்சோம்..."

சொல்லிக் கொண்டே திரும்பிய இன்ஸ்பெக்டர் ஆத்திரம் தாளாமல் பளீரென்று பரத்மெஹ்ராவின் கன்னத்தில் ஒரு அறை விட்டு வாசலை நோக்கித் தள்ளிக் கொண்டு போனார்.

அவரைத் தொடர்ந்து மற்ற காக்கி யூனிபார்ம்கள் நகர்ந்து போனதும் வாசுதேவனும் முகேஷும் நிம்மதிப் பெருமூச்சுக்களோடு ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

"முகேஷ்!"

"என்னப்பா?"

"ஒரு கொலைப் பழியிலிருந்து அதிர்ஷ்டவசமாக தப்பிச்சுட்டோம். கோயிந்துக்கு கொஞ்சம் பணம் கொடுத்து அனுப்பிச்சுடு."

"அப்பா...?"

"என்னடா?"

"இனிமே இந்த பிளாக்ல வியாபாரம் பண்ற வேலையே வேண்டாம். இருக்கிற ஸ்டாக்கைக் காட்டி ஒயிட்டிலேயே பிசினஸ் பண்ணுவோம். நிஜமான சி.பி.ஐ. ஆபீசர் வந்தா நாம் தப்பிக்கவே முடியாது..."

"நானும் அந்த முடிவுக்கு எப்பவோ வந்து விட்டேன்."

○ ○ ○

## 26

ரிவால்வரைக் கையில் எடுத்துக் கொண்ட அம்சா ஒரு விநாடி கூட தாமதிக்காமல் அமிர்தத்தின் மார்பை நோக்கிச் சுட்டாள்.

சைலன்சர் பொருத்தப்பட்டிருந்த ரிவால்வர் ரகசியமாய் சீற அமிர்தம் மார்பு பூராவும் ரத்தத்தைப் பரவ விட்டுக் கொண்டு சுவரோரமாய் விழுந்தான்.

"வராதே எம் பக்கத்தில் வராதே..." கத்திக் கொண்டே வாசல் கதவை நோக்கி ஓடினாள்.

ஒரு கையில் துப்பாக்கியோடு கதவைத் திறந்தாள்.'

வெளியே நின்றிருந்த டாக்டர் ரகுபதி அதிர்ந்து போய் உள்ளே வந்தார்.

"எ... என்ன அம்சா? ஏன் இப்படி ஓடி



வர்றே...? கை... கையில எதுக்காக ரிவால்வர்?"

"எ... என்ன மன்னிச்சுடுங்க! நான்... நான் அந்த மிருகத்தைச் சுட்டுட்டேன்..."

"சு... சுட்டியா... யாரை?"

"அ... அமிர்தத்தை..."

விக்கென்று அதிர்ந்து போய் வாசல் கதவைச் சாத்தினார் ரகுபதி. அம்சாவின் தோள் பட்டையை இறுக்கமாய் பற்றினார்.

"அ... மி... ர்...த...தத்தைச் சுட்டியா? ஏன்?"

"அ...வ...ன்... எங்கிட்டே தப்பா நடந்துக்கப் பார்த்தான். பார்ட்டியிலேயிருந்து வந்ததுமே குளிக்கக் கிளம்பினேன். பின்னாடியே வந்து பலவந்தம் பண்ண ஆரம்பிச்சுட்டான். நான் அவனை சு... சு... சும்மா மிரட்டறதுக்காக ரிவால்வரை கையில் எடுத்தேன். அவன் பயந்து போய் என் கையிலிருந்த ரிவால்வரைப் பிடுங்க முயற்சி பண்ண அது திடீர்னு வெடிச்சு..."

கையிலிருந்த ரிவால்வரை எறிந்து விட்டு ரகுபதி மார்பில் தலையைப் புதைத்து அழ ஆரம்பித்தாள்.

ரகுபதி ஸ்தம்பித்துப் போய் நின்றிருந்தார். சில நிமிஷங்கள் அம்சாவின் விசும்பலில் கரைந்து போக... சுதாரிப்புக்கு வந்

தார்.

"அமிர்தம் எங்கே செத்து கிடக்கறான்?"

"அ... அங்கே?"

"வா... போகலாம்..."

போனார்கள்.

மார்பில் தோட்டாவை வாங்கிக் கொண்டு மார்பு பூராவும் ரத்தமாய் மல்லாந்திருந்தான் அமிர்தம். கண்களில் உயிரை விட்டு வாயைப் பிளந்திருந்தான்.

ரகுபதி தலையைப் பற்றிக் கொண்டு கட்டிலின் மேல் உட்கார்ந்தார்.

"அம்சா நீ அவசரப்பட்டுட்ட... கொஞ்சம் நிதானம் இருக்கணும்."

"எப்படிங்க நிதானிக்க முடியும்? அவன் வெறிபிடிச்ச மாதிரி என் மேலே பாயறான். ரிவால்வரைக் காட்டி மிரண்டு போய் விட்டுடுவான்னு நினைச்சேன்."

ரகுபதி செத்துக் கிடந்த அமிர்தத்தை எரிச்சலாய் பார்த்தார்.

"பாம்புக்கு பால் வார்த்தது என் தப்பு தான்."

"இப்ப என்னங்க பண்றது? போலீசுக்கு தகவல் சொல்லிடலாமா?"

"போ... போலீசா?"

"ஆமாங்க. அவங்களுக்கு போன்



பண்ணி வரவழைச்சு நடந்த உண்மைகளைச் சொல்லிடலாம்."

"முட்டாள்தனமா உளறாதே அம்சா... நீ போலீஸ்ல பிடிபட்டு பேப்பர்ல நியூசா அடிபட்டு ஜெயிலுக்குப் போற அந்த அவமானம் தலைமுறை தலைமுறையா அப்படியே நின்னுடும்..."

"பின்னே என்ன பண்ணலாம்கறீங்க?"

"பாடியை யார்க்கும் தெரியாம எங்கேயாவது கொண்டு போய் போட்டுடலாம். அப்படி போடறதுக்கு முன்னாடி அடையாளம் தெரியாம இருக்கிறதுக்காக ஆசிட்டை ஊத்தி மூஞ்சியை சிதைச்சுடலாம்."

"இதெல்லாம் எனக்கு பயமா இருக்குங்க. நடந்த உண்மையை போலீஸ்ல சொன்னா?"

"முட்டாள் தனமா உளறாதே அம்சா. செத்திருக்கிறவன் சாதாரண ஆள் இல்லை. பிரபலமாயிட்டு வந்த ஒரு பின்னணிப் பாடகன். பேப்பர்க்காரன் பத்தி பத்தியா வரிஞ்சு தள்ளிடுவான்."

"சரி பாடியை எங்கே கொண்டு போய் போடறது?"

"கூவத்துல போட்டுடலாம்."

○ ○ ○

## 27

"நல்ல முத்து கையாலே தாயத்து வாங்கிற அஞ்சுபேர்ல நாலு பேர் உயிரோடு இருக்காங்க. இன்னொரு ஆள் பின்னணிப் பாடகர் அமிர்தம். புகழடைஞ்சுட்டு வந்த நேரத்துல கண் திருஷ்டி பட்டுடக் கூடாதுன்னு அமிர்தமே நல்ல முத்துக்கிட்ட தாயத்து வாங்கி கட்டிகிட்டாராம். அவர்மட்டும் ஊர்ல இல்லை. நாலு நாளைக்கு முன்னாலே பம்பாய் போயிட்டதா அவரோட வீட்டு வேலைக்காரன் மணி சொல்றான்..."

இன்ஸ்பெக்டர் கோகுல்நாத் - கண்ணாடி டம்ளரில் இருந்த டீயை உறிஞ்சிக் கொண்டே தன் எதிரே உட்கார்ந்திருந்த எஸ்.2 ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் ராமபத்ரனிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

வாசலில் பைக் சத்தம் கேட்டது.

விவேக் பைக்கை நிறுத்திவிட்டு ஸ்டேஷனுக்குள் எட்டிப் பார்த்து குரல் கொடுத்தான்.

"கோகுல்நாத். ஒரு நிமிஷம் வர்றீங்களா?"

பாதி டீ இருந்த டம்ளரை அப்படியே மேஜையின் மீது வைத்துவிட்டு விவேக்கை நோக்கி வந்தார்.

"என்ன விவேக்? ஏர்போர்ட் போய்ட்டு



வந்திட்டீங்களா?"

"ம்..."

"என்னாச்சு?"

"பம்பாய் ஃப்ளைட்ல அமிர்தம் ஜர்னி பண்ணவேயில்லை. அந்த ஃப்ளைட்ல மட்டுமில்லை, கடந்த நாலு நாளா பம்பாய் போன எந்த ஃப்ளைட்டிலும் அவர் ஜர்னி பண்ணவே இல்லைங்கிறதை கன்பர்ம் பண்ணிட்டேன்."

"அப்படியானா செத்தது அமிர்தம் தானா?"

"என்னோட கணிப்பு அதுதான். இப்போ நாம மறுபடியும் அமிர்தம் வீட்டுக்குப் போய் அந்த வேலைக்காரன் மணியைப் பார்க்கிறோம்."

"எதுக்கு?"

"வாங்க சொல்றேன்."

கோகுல்நாத் பில்லியனில் பரவ பைக்கை உதைத்து உயிரூட்டிக் கொண்டு கிளம்பினான்.

அடுத்த பத்தாவது நிமிஷம் -

அமிர்தத்தின் வீட்டு வெளிப்புற திண்ணையில் துண்டை விரித்துத் தூங்கிக் கொண்டிருந்த மணியைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தார்கள்.

"மணி."

"ஸ... ஸார்."

அவன் எழுந்து திடுமென்று நின்றான்.

"அமிர்தத்தைப் பத்தி இன்னும் கொஞ்சம் தகவல்கள் வேணும்."

"கே... கேளுங்கய்யா..."

"அவர் அன்னிக்கு ஏர்போர்ட் போகும் போது எதுல போனார்?"

"டாக்ஸி..."

"டாக்ஸியை யார் கூட்டி வந்தது?"

"நான்தான் சார்."

"உனக்கு தெரிஞ்ச டாக்ஸியா அது?"

"ஆமா... சார்... பக்கத்து ஸ்டாண்ட்ல தான் அந்த டாக்ஸி நின்னுட்டிருக்கும்."

"இந்த நேரத்துல அந்த டிரைவர் இருப்பாரா?"

"இருப்பார் சார்..."

"வா... போய் பார்க்கலாம்..."

**டா**க்டர் ரகுபதியின் வீடு.

காலிங்பெல்லை அடித்துவிட்டு காத்திருந்தான் விவேக்.

அரை நிமிஷ அவகாசத்திற்குப் பிறகு கதவு திறக்க டாக்டர் ரகுபதி தெரிந்தார்.



"டாக்டர் ரகுபதி?"

"மை செல்ப்..."

"உங்க கூட கொஞ்சம் பேசணும் டாக்டர்..."

"நீங்க யாரு...?"

"அமிர்தத்தோட பிரண்ட்..."

குப்பென்று முகம் இருண்டார் டாக்டர்.

"என்னோட ஒய்ப்பும் இருக்கா."

சொல்லிக் கொண்டிருக்கும்போதே சீப்பால் தலையை வாரியபடி பக்கத்து அறையிலிருந்து அம்சா வெளிப்பட்டாள்.

"யாருங்க அது...?"

"அ... அ... அமிர்தத்தோட ப்ரெண்டாம்."

ரகுபதி குழறலான குரலில் சொல்ல அம்சாவின் முகம் இருட்டுக்குப் போவதை சட்டென்று போட்டோ பிடித்தான் விவேக்.

ரகுபதி கேட்டார்.

"அமிர்தத்தைப் பத்தி என்கிட்டே என்ன பேசணும்?"

"நாலு நாளைக்கு முன்னாடியே அவன் பம்பாய் வந்திருக்கணும்... வரலை... அதான் பார்த்துட்டு போலாம்னு வந்தேன்..."

''அதுக்கு இங்கே வந்து என்ன பண்றது?''

''அமிர்தத்தை உங்க வீட்டுலதான் கொண்டு வந்து விட்டதா டாக்சி டிரைவர் சொல்றார். ஆனா அன்னிக்கு அமிர்தம் பதினோரு மணி பம்பாய் ஃப்ளைட்ல ஜர்னி பண்ணலை. உங்க வீட்டுலேயேதான் இருந்தார்.''

''நோ... நோ... அவர் உடனே புறப்பட்டு போயிட்டார்.''

''அமிர்தம் அப்படிப் புறப்பட்டு போயிருந்தா ஏர்போட்டுக்குத்தானே போயிருக்கணும். ஆனா அமிர்தம் ஃபிளைட்ல ஜர்னியே பண்ணலையே.''

''அதைப் பத்தி எனக்குத் தெரியாது.''

''டாக்டர் உங்க கார் நெம்பர் டி.டி.வி. 6734 தானே...?''

''ஆமாம்.''

''நாலு நாளைக்கு முன்னாடி ராத்திரி 11.30 மணிக்கு கூவம் பாலத்துக்கு இடது பக்கமா ஏன் நின்னுட்டிருந்தது?''

டாக்டர் ரகுபதியும் அம்சாவும் திடும்மென்று அதிர்ந்து போய் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டார்கள். விவேக் தொடர்ந்தான்.

''உங்க கார் கூவம் பாலத்து மேலே நின்னுக்கிட்டிருந்ததாகவும் சாரோட டிக்கியிலிருந்து எதையோ எடுத்து கூவத்துக்குள்ளே போட்டதாகவும் ரோகிணிங்கிற பெண் எனக்கு இன்பார்ம் பண்ணியிருக்காங்க... டாக்டர் நடந்த உண்மைகளைச் சொல்லிடறீங்களா?''



''தம்பி.''

டாக்டர் ரகுபதி விவேக்கின் கைகளைப் பற்றிக் கொண்டார்.

''நான் நடந்த உண்மைகளைச் சொல்லிடறேன். தயவு பண்ணி எங்களை போலீஸ்ல காட்டிக் குடுத்துடாதீங்க..''

''மொதல்ல உண்மைகளைச் சொல்லுங்க...''

விவேக்கிற்கு இரண்டு பக்கத்திலும் நின்று கொண்டு அம்சாவும், ரகுபதியும் அமிர்தத்தின் மரணத்தைப் பற்றி இரண்டு நிமிஷ நேரம் சொன்னார்கள்.

விவேக் புன்னகைத்தான்.

''ஆக... கொலை பண்ணினது உங்க மனைவி பாடியை கூவத்துல போட்டது நீங்க...! இல்லையா டாக்டர்?''

''ஆமா... தம்பி! நீங்க கேக்கிறபணம் தர்றேன். ,தயவு பண்ணி போலீஸ்ல சொல்லிடாதீங்க...?''

''சாரி டாக்டர். கவர்ன்மெண்ட் எனக்கு

மாசா மாசம் ஃபோர்ட் டிஜிட் சாலரியிலே ஒரு கணிசமான அமௌண்ட்டை தர் றாங்க... நானும் மாசா மாசம் ரெவின்யூ ஸ்டாம்ப்ல கையெழுத்துப் போட்டு கை நீட்டி வாங்கிட்டிருக்கேன். அரசாங்கத் தோட உப்பைத் தின்னுட்டு அரசாங்கத் துக்கே துரோகம் பண்றது தப்பில் லையா...?"

"நீ...ங்...க?" டாக்டர் தடுமாற்றமாய் கேட்டார்.

"ஐயாம் விவேக்... க்ரைம் ப்ராஞ்ச் ஆபீ சர்..."

(முற்றும்)



# படுக்கையறைக் கண்கள்

**- ரமணீயன்**

***அ**வளைக் காணோம்!*

ஆமாம். திவ்யாவைக் காணோம் என்ற செய்தி என் மூளையின் செல்களுக்கு எட்ட அதிக நேரம் பிடிக்கவில்லை.

*பிட்ச்!*

என்னை ஏமாற்றி விட்டாள். 'வைக் காதே பொண்ணு மேலே ஆசை' - என்று எவ்வளவ தாடிக்கார சாமியார்கள் அட் வைஸ் செய்திருக்கிறார்கள்.

அதை எல்லாம் கேட்டிருக்க வேண் டும்.

அவளிடம் மயங்கி விட்டேன்.